14491

# இலக்கிய விழா

## 1995




# சிறப்பு மலர்

840.98
வடகி
SLIPR.

டக்கு-கிழக்கு கல்வி கலாசார அலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு

திருக்கோணமலை. 23—07—1995

# இலக்கிய விழா

# 1995

## சிறப்பு மலர்

வடக்கு - கிழக்கு மாகாண
கல்வி, கலாசார அலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு,
திருக்கோணமலை.

# வடக்கு - கிழக்கு மாகாண
# கௌரவ ஆளுநரின் ஆசிச் செய்தி

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் சாகித்திய விழா - 1995 வெற்றிகரமாக அமைய வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். இது இம்மாகாணக் கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்படும் நான்காவது விழாவாகும்.

கலைஞர்களையும், எழுத்தாளர்களையும் கௌரவிக்கவேண்டியது சமுதாயத்தின் கடமையாகும். அதன் மூலம் அவர்களின் பங்களிப்பை மென்மேலும் பெற்றுச் சமுதாயம் பயனடைய வழி ஏற்படுகின்றது. இவ்வகையில் இம்மாகாணச் சாகித்திய விழா முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகின்றது. சிறுகதை, கவிதை, நாவல், நாடகம், சிறுவர் இலக்கியம், சமய இலக்கியம், ஆய்விலக்கியம் ஆகிய ஏழு துறைகளைச் சார்ந்த எழுத்தாளர்கள் இங்கே பாராட்டி கௌரவிக்கப் பட உள்ளனர். மேலும், எட்டு மாவட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட எட்டு கலைஞர்கள் விருது வழங்கப்பட உள்ளனர்.

இம்மாகாண எழுத்தாளர்களின் சிறு கதைகளை உள்ளடக்கிய தொகுப்பு ஒன்று வெளியிடப்பட இருப்பது இன்னுமொரு சிறப்பம்சமாகும். பெறுமதி வாய்ந்த இத்தகைய ஒரு நடவடிக்கை இவ்வமைச்சினால் மேற்கொள்ளப்படுவது இதுவே முதற் தடவை என அறிகின்றேன். எமது எழுத்தாளர்களை ஊக்குவிக்க மென்மேலும் வெளியீடுகள் வருங்காலத்தில் இடம்பெற வேண்டும் என வாழ்த்துகின்றேன். நூல்களின் கண்காட்சி, எழுத்தாளர் கலந்துரையாடல் போன்ற நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்படுவதும் பாரட்டுதற்குரியதாகும்.

எழுத்தாளர் ஊக்குவிப்பும், வெளியீடுகள் போன்ற நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்படவேண்டும். தமிழ் நாடகங்களின் வளர்ச்சி தொடர்பாக மாகாண மட்டத்தில் கவனஞ்செலுத்தப்பட வேண்டும். நவீன போக்குக்களுடன் இசைவுபடத் தக்கதாக இத்துறையில் கூடுதல் அக்கறை காண்பிக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இத்துறை வளர்ச்சிக்கென இவ்வமைச்சு ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்துமென பெருவிருப்புடன் நம்புகிறேன்.

சாகித்தியவிழா வெற்றி பெற வாழ்த்துவதோடு இதில் ஈடுபடும் சகலரையும் முழு மனதோடு பாராட்டுகிறேன். இவ்விழாவைக் குறிக்குமுகமாக வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

**கலாநிதி காமினி பொன்சேகா**

# வடக்கு - கிழக்கு மாகாண
# பிரதம செயலாளரின் ஆசிச் செய்தி

வடக்கு - கிழக்கு மாகாணசபை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்படும் நான்காவது சாகித்திய (இலக்கிய) விழா இதுவாகும். வடக்கு கிழக்கிலுள்ள எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தும் நோக்கோடு அவர்களால் இயற்றப்படும் இலக்கியங்களுக்குப் பரிசும், பாராட்டும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், சமய இலக்கியம், சிறுவர் இலக்கியம், ஆய்வு இலக்கியம் ஆகிய ஏழு துறைகள் சார்ந்த எழுத்தாளர்களும் விருது பெற்று வருகின்றனர். 1994ம் ஆண்டு சாகித்தியப் பரிசிற்காக 'பல்துறை' என்னும் இன்னுமொரு பிரிவும் சேர்க்கப்பட்டுள்ளதாக அறிகின்றேன். இவ்வாறான புதிய மாற்றங்களைப் பாராட்டுகின்றேன்.

மட்டக்களப்பிலே நடைபெறவுள்ள சாகித்திய விழாவின்போது ஒருநாள் நிகழ்ச்சியில் எழுத்தாளர் பலரது சிறுகதைத் தொகுதி நூல் ஒன்றும் வெளியிடப்படுவது, மேலும் உற்சாகத்தினை எழுத்தாளர்களுக்கு வழங்குவதாகவுள்ளது. இரண்டாம் நாள் நிகழ்வின்போது ஒவ்வொரு மாவட்டத்தினின்றும் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு சிறந்த கலைஞர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார். இதுவும் புதிதாக விழாவிலே சேர்க்கப்பட்டுள்ளது. இனிவரும் ஆண்டுகளில் கௌரவிக்கப்படவுள்ள கலைஞர்களின் தொகையினை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதே எனது விருப்பாகும். எழுத்தாளர் ஒன்றுகூடல், எழுத்துப் பயிற்சிப் பட்டறை, புத்தகக் கண்காட்சி ஆகிய புதிய அம்சங்கள் விழாவிற்கு மேலும் மெருகினை ஊட்டுகின்றன. சாகித்திய விழாவின் போது வழமைபோல் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு இவ் ஆசிச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். விழா எல்லா வகையிலும் சிறப்புற்று இனிதே நடைபெற நல்வாழ்த்துக்கள்.

**சொ. கணேசநாதன்**
பிரதம செயலாளர்

# ஆசியுரை

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சினால் இவ்வாண்டு நடாத்தப்பெறும் சாகித்திய-இலக்கிய விழாவினையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு இவ்வாசியுரையினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவ்விழா எமது அமைச்சினால் நடாத்தப்பெறும் நான்காவது விழாவாகும். இம்முறை நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், சிறுவர் இலக்கியம், சமய இலக்கியம், ஆய்வு இலக்கியம் ஆகியதுறைகளில் சிறந்த ஆக்கங்களை வழங்கிய எமது மாகாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவதுடன் ரூபா 3,000/- பணப் பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெறவுள்ளனர். இம்முறை எமது மாகாணத்தின் எட்டு மாவட்டங்ளைச் சேர்ந்தவர்களான தேர்ந்தெடுக்கப்பட்ட எட்டுக் கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். இவ்வாண்டு நிகழ்வுகளின் சிறப்பு அம்சங்களாக எமது அமைச்சினால் அச்சிடப்பட்டுள்ள சிறுகதை நூல் வெளியீடும் எழுத்தாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையும் இடம்பெறவுள்ளன. விசேட நிகழ்வுகளாக மட்டக்களப்பு எழுத்தாளர்களின் ஒன்றுகூடலும், புத்தகக் கண்காட்சியும், நாட்டுக்கூத்து நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளதாக அறியக்கிடக்கின்றது. இவ்வாண்டின் நிகழ்ச்சிகள் விரிவான முறையில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளமை மனநிறைவைத் தருகின்றது. சாகித்திய விழா நிகழ்வுகள் அனைத்தும் சிறப்புற நிறைவுற எனது நல்வாழ்த்துக்கள்.

**க. தியாகராஜா**
*செயலாளர்*
**கல்வி, கலாசார, விளையாட்டுத்துறைஅமைச்சு**
**வடக்கு-கிழக்கு மாகாணம்**
**திருக்கோணமலை.**

# ஆசியுரை

மட்டக்களப்பின் இலக்கிய வரலாற்றை சுவாமி விபுலாநந்தருடன் ஆரம்பிப்பது வழக்கமாகி விட்டது. ஆனாலும் அவருக்கு முன்பும், அவர் காலத்திலும், அவருக்குப் பின்பும் பல தமிழறிஞர்கள் மட்டக்களப்பின் இலக்கிய வளர்ச்சிக்கு வகை செய்துள்ளனர். அந்த வகையில் வித்துவான் க. பூபாலபிள்ளை (1890) வித்துவான் சரவணமுத்தன், பண்டிதர் செ. பூபாலபிள்ளை, புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, மகாவித்துவான் வி. சி. கந்தையா, மகாவித்துவான் எவ். எக்ஸ். சி. நடராசா, பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களுடைய இலக்கிய வழியைத் தொடருவதற்குப் பொருத்தமானவர்கள், இப்போது இல்லையென்ற போதிலும், நவீன இலக்கியமான சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, கட்டுரை முதலிய துறைகளில் தேர்ச்சி பெற்ற பலர் மட்டக்களப்பில் இருக்கவே செய்கிறார்கள். ஆனால் அவர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவானவர்களே. எனவே இத்துறையில் ஒரு ஊக்குவிப்பு அவசியமாகிறது.

வடக்கு - கிழக்கு மாகாண சபை நடாத்தும் சாகித்திய விழா, இலக்கியத் துறையில் இளைஞர்களை ஊக்குவிக்கவும், ஏற்கனவே இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களை கனம் பண்ணவும் வழி வகுக்கிறது. ஆண்டுதோறும் நடைபெறும் இச் சாகித்திய விழாவில், சிறந்த நூல்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இவ்வாண்டு வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கீழுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சிறந்த கலைஞர் கௌரவிக்கப்படுகிறார். இச் செயற்பாடுகள் நமது இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு சிறிய அளவிலேனும் பங்களிப்புச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

இச் சாகித்திய விழா இவ்வாண்டு மட்டக்களப்பில் நடைபெறுவது, மிகவும் பொருத்தமானதாகும். இவ்விழா சிறப்பாக நிறைவேற வாழ்த்துகிறேன். இம்முயற்சியில் முன்னின்று உழைக்கும் அனைவரையும் பாராட்டுகிறேன்.

**அ. இ. பத்மநாதன்,**
*அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்*
**மட்டக்களப்பு.**

**கச்சேரி, மட்டக்களப்பு.**
**02 - 05 - 1995.**

# மலரை நுகருமுன்னர் .....

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, கலாசார அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் நான்காவது இலக்கிய விழா மட்டக்களப்பிலே நடைபெறுகிறது. இவ்விழா விலே ஏழு துறைசார் அறிஞர்கள் சாகித்தியப் பரிசு பெறுகின்றனர். கடந்த 1994ம் ஆண்டுக்காலப் பகுதியில் வெளிவந்த இலக்கியங்களுக்குப் பரிசில் வழங்கும்போது மேல திகமாகப் 'பல்துறை' என்னும் பிரிவும் சேர்க்கப்பட்டுள்ளது. அத்தோடுமாத்திரம் அல்லாமல் பரிசுத்தொகையும் ரூபா 5000/- ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிலே நடைபெறும் இவ்விழாவிலே இன்னுமொரு சிறப்பம்சம் யாதெ னின் வடக்கு - கிழக்கு, எட்டு மாவட்டங்களிலிருந்தும் அரசாங்க அதிபர்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட எட்டுக் கலைஞர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவிருப்பதாகும். அத்தோடு விழா இரு தினங்கள் நடைபெறும் போது; புத்தகக் கண்காட்சியொன்றும் மட்டக்களப்பு எழுத்தாளர்களின் ஒன்று கூடல் நிகழ்ச்சியும், எழுத்துப் பயிற்சிப் பட்டறையும் நடைபெறுகின்றன. வடக்கு - கிழக்கு எழுத்தாளர்களது ஆக்கங்களை நூலுருவில் அச்சிட்டு வெளியிடும் திட்டத்தின் கீழ் பத்துச் சிறுகதை எழுத்தாளர் களது ஆக்கங்களைக் கொண்டவொரு 'சிறுகதைத் தொகுதி' நூல் வெளியீடும் இவ் விழாவின் முதல் நாள் அன்று இடம்பெறுகின்றது. எழுத்தாளர்களை எந்தெந்த வழி களிலெல்லாம் உற்சாகப்படுத்த முடியுமோ அவ்வழிகளிலெல்லாம் ஊக்கப்படுத்த கலா சார அலுவல்கள் திணைக்களம் செயற்பட்டு வருகின்றது. ஒவ்வொரு எழுத்தாளரிட மிருந்தும் ரூபா 5000/-க்கு குறையாமல் நூல்களைக் கொள்வனவு செய்து பாடசாலை நூலகங்களுக்கும், பொது நூலகங்களுக்கும் வழங்கி வருவதினையும் ஈண்டு குறிப்பிடல் பொருத்தமானதாகும்.

இலக்கிய விழா இரண்டு தினங்களும் மட்டக்களப்பில் மிகச் சிறப்பானமுறையில் நடைபெறுவதற்கு அரசாங்க அதிபர் தொடக்கம், சகல திணைக்களங்களின் தலைவர் கள், உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். விழா ஏற் பாட்டுக் குழுவின் செயலாளராக இருந்து தனது பணியைத் திறம்படச் செய்த கலாசார உத்தியோகத்தர் செல்வி தங்கேஸ்வரி கதிர்காமன், ஏனைய குழுக்களின் இணைப்பாளர்கள், அவர்களது உறுப்பினர்கள், விருது பெற்றோர், நடுவர்கள், நிகழ்ச் சிகளுக்குத் தலைமை தாங்கியோர், சிறப்புரையாற்றியோர், பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், விசேட நிகழ்ச்சிகளான நாட்டுக்கூத்து, நடன நிகழ்ச்சி முதலிய வற்றைத் தயாரித்து வழங்கியோர், எமது அமைச்சின் செயலாளர் ஏனைய உத்தியோ கத்தர்கள் எனப் பல வழிகளிலும் அனேகரின் பங்களிப்பு விழாவிற்குத் தேவைப்பட் டது. அவர்கள் எல்லோருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியினைத் தெரிவிக்கும் கடப் பாடுள்ளது. அத்துடன் சிறப்பு மலருக்கு ஆசியுரைகள், கவிதை, கட்டுரை என்பவற் றைத் உவந்தளித்த அறிஞர் பெருமக்கள், மலர்க் குழுவினர், சிறந்த முறையில் அச்சில் பதிப்பித்துத் தந்த பதிப்பகத் திணைக்களத்தினர், சிறப்பாக உதவிப் பணிப்பாளர் திரு. த. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும் என்றும் நன்றி உரித்தாகட்டும்.

எஸ். எதிர்மன்னசிங்கம்
இணைப்பாளர்
விழாக்குழு

# 1993ம் ஆண்டிற்கான இலக்கியப் (சாகித்திய)

## பரிசு பெறும் நூல்கள்

۞ நாவல்

**பஞ்சகோணங்கள்**

— திரு. கே. டானியல்

۞ சிறுகதை

**யாழ்ப்பாணத்து ராத்திரிகள்**

— திரு. க. குணராசா (செங்கையாழியன்)

۞ கவிதை

**நாகரீகத்தின் நிறம்**

— திரு. க. சண்முகலிங்கன்

۞ நாடகம்

**பாலசுகுமார் நாடகங்கள்**

— திரு. பாலசுகுமார்

۞ சமய இலக்கியம்

**கோணேசர் கல்வெட்டு**

— பண்டிதர் இ. வடிவேல்

۞ சிறுவர் இலக்கியம்

**அணில் வால்**

— கவிமணி திமிலைத்துமிலன்

۞ ஆய்வு இலக்கியம்

**யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு**

— கலாநிதி சி. க. சிற்றம்பலம்

# 1993ம் ஆண்டிற்காக இலக்கியப் (சாகித்திய) போட்டிக்கு அனுப்பப்பட்ட நூல்கள்

## 01) நாவல்:

01. பஞ்சகோணங்கள் — திரு. கே. டானியல்
02. இவர்களும் வாழ்கிறார்கள் — திரு. சோ. இராமேஸ்வரன்
03. ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது — திரு. வ. அ. இராசரெத்தினம்
04. மாது என்னை மன்னித்துவிடு — திருமதி. பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கம்

## 02) சிறுகதை:

01. வரலாற்றுச்சுவடுகள் — திரு. இரா. நாகலிங்கம் (அன்புமணி)
02. யாழ்ப்பாணத்து ராத்திரிகள் — திரு. க. குணராசா (செங்கையாழியன்)
03. சிறகொடிந்த பறவை — திருமதி. அ. யோகராசா (மண்டூர் அசோகா)
04. அயல் கிராமத்தவர்கள் — திரு. நந்தினி சேவியர்
05. நகைச்சுவைக் கதைகள் — திரு. ஓ. கே. குணநாதன்

## 03) கவிதை:

01. கவிதைப் பூக்கள் — கவிஞர் கண்ணையா
02. ஏழை நிலா — திரு. செ. குணரத்தினம் (அமிர்தகழியான்)
03. நாகரீகத்தின் நிறம் — திரு. க. சண்முகலிங்கன்
04. கவி உள்ளம் — திரு. சோமசுந்தரம் (மண்டூர்ப்புலவர்)

## 04) நாடகம்:

01. இரை தேடும் பறவைகள் — திரு. எஸ். எஸ். கணேசபிள்ளை (வரணியூரான்)
02. பாலசுகுமார் நாடகங்கள் — திரு. பாலசுகுமார்
03 ஒரு பூ மலர்கிறது — திரு. வாகரை வாணன்

## 05) சமய இலக்கியம்:

01. நல்லைக்குருமணியின் வாழ்வும் வளமும் — திரு. நாகபரமசாமி
02. அண்ணல் மாநபி பிறந்தனரே — ஜனாப் அப்துல் கஹ்ஹான்
03. கல்முனைக்குடிஜும்மா பள்ளி வரலாறு — ஹாஜி உஸ்மான் சாகிப்
04. கண்ணகையும் தன்னகையும் பொ. பா. — திரு. வெ. வினாயகமூர்த்தி
05. கோணேசர் கல்வெட்டு — பண்டிதர் இ. வடிவேல்

## 06) சிறுவர் இலக்கியம்:

01, சான்றோன் எனக்கேட்டதாய் — திரு. க. சண்முகலிங்கன்
02. அம்மா சொன்ன கதை — திரு. க. இ. க. கந்தசாமி
03. பாலர் தமிழ் பாட்டு — கவிஞர் வாகரை வாணன்
04. அணில் வால் — கவிமணி திமிலைத்துமிலன்
05. பயங்கர இரவு — மாஸ்ரர் சிவலிங்கம்

## 07) ஆய்வு இலக்கியம்:

01. குளக்கோட்டன் தரிசனம் — செல்வி. த. கதிராமன்
02. பூநகரி தொல்பொருளாய்வு — திரு. ப. புஸ்பரெட்ணம்
03. யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு — கலாநிதி சி. க. சிற்றம்பலம்
04. வடஇலங்கையில் சிங்கை நகர் — திரு. ப. புஸ்பரெட்ணம்

# இலக்கிய விழா ஏற்பாட்டுக்குழு - 1995

*காப்பாளர்* - **திரு. க. தியாகராஜா,**
*செயலாளர், கல்வி கலாசார அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு.*

*தலைவர்* - **திரு. ஏ. கே. பத்மநாதன்,**
*அரசாங்க அதிபர், மட்டக்களப்பு.*

*உபதலைவர்* - **திரு. எஸ். எஸ். மனோகரன்,**
*மாவட்டக் கல்விப்பணிப்பாளர்.*

*இணைப்பாளர்* - **திரு. எஸ். எதிர்மன்னசிங்கம்,**
*மாகாண கலாசார உதவிப்பணிப்பாளர்.*

*செயலாளர்* - **செல்வி. தங்கேஸ்வரி கதிராமன்,**
*மாவட்ட கலாசார உத்தியோகத்தர்.*

*உபசெயலாளர்* - **எஸ். மகேந்திரன்,**
*கலாசார உத்தியோகத்தர், மட்டக்களப்பு.*

*பொருளாளர்* - **திரு. க. கிருஸ்ணபிள்ளை,**
*அலுவலக உதவியாளர், கச்சேரி, மட்டக்களப்பு.*

*உறுப்பினர்கள்* - **திரு. த. செல்வநாயகம்,** **ஆசிரியர் சிரோன்மணி.**
**தமிழ்மணி எஸ். தங்கவேல்** (*திமிலை மகாலிங்கம்*)
**ஜனாப். எம். எம். மஃறூப் கரீம்,** *உதவிப்பணிப்பாளர், மட்டக்களப்பு.*
**திரு. பொன் செல்வநாயகம்,** *உதவிப்பணிப்பாளர்,*
*தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மட்டக்களப்பு.*

## விழாக்குழு:

*இணைப்பாளர்* - **திரு கே. குருநாதன்,** *மாவட்டக் காணி உதவி ஆணையாளர்.*
**திரு. கே. நவரெட்ணம்,** *திட்டப்பணிப்பாளர்.*
**திருமதி. சுபாஜினி சக்கரவர்த்தி,**
*உதவிப்பணிப்பாளர், கல்வித் திணைக்களம்.*
**திரு. அ. இருதயநாதன்.**
**திரு. த. யுவராஜன்.**
**திரு. கா. நடராசா.**
**திரு. எஸ். மகேந்திரன்.**
**திருமதி. நிர்மலா.**
**திருமதி. தட்சணாமூர்த்தி.**
**திருமதி. சி. விமல்ராஜ்.**

**உபசரணைக்குழு:**

இணைப்பாளர் - திரு. எஸ். தவராசா, மாவட்ட இளைஞர்சேவை அதிகாரி.
திரு. சா. ஜெயராம், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர்.
திருமதி. நிர்மலா
திருமதி. இ. விமல்ராஜ்.
திருமதி. எஸ். தங்கவேல்.

**மலர்க்குழு:**

இணைப்பாளர் - ஆசிரியர் சிரோன்மணி த. செல்வநாயகம்.
திரு. க. யேகராஜா.
திரு. த. யுவராஜன்.
கலாசூரி. வெ. விநாயகமூர்த்தி.
திரு. எஸ். தங்கவேல். (திமிலை மகாலிங்கம்)

**நிதி, தங்குமிட ஏற்பாட்டுக்குழு:**

இணைப்பாளர் - திரு. ப. கிருஸ்ணபிள்ளை, அலுவலக உதவியாளர், கச்சேரி.
திரு. சா. ஜெயராம், திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர்.
திரு. வி. கனகசிங்கம், அதிபர், ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை.
திரு. அ. இருதயநாதன், அதிபர்.

**எழுத்தாளர் பயிற்சிப் பட்டறை ஏற்பாட்டுக்குழு:**

இணைப்பாளர் - கலாநிதி. சி. மௌனகுரு,
தலைவர், நுண்கலைப்பீடம், கிழக்கு பல்கலைக்கழகம்.
திரு. க. யோகராசா, விரிவுரையாளர், கிழக்கு பல்கலைக்கழகம்.
திரு. இரா. துரைரெட்ணம்.
திரு. இ. பாக்கியராசா.
திரு. த. யுவராஜன்.

**புத்தகக் கண்காட்சிக்குழு:**

இணைப்பாளர் - திரு. கா. நடராசா: சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்.
திரு. எஸ். தியாகராசா, உதவிப்பணிப்பாளர், கல்வித் திணைக்களம்.
திரு. த. யுவராஜன்.
திரு. எஸ். தவராசா.
திரு. சா. ஜெயராம்.
திரு. வித்தியாசாகரன், நூலகர், பொதுநூல் நிலையம்.

# இலங்கையிலே பண்ணும் பரதமும் - சில குறிப்புகள்

இலங்கைத் திருநாட்டிலே வாழும் தமிழரின் முதுசொத்தாக பண்ணும் பரதமும் நீண்டகால மாக நிலவி வந்துள்ளன. ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியிலே - மத்தியகாலத்திலே இவை சிங்கள மக்கள் மத்தியிலும் ஓரளவாவது செல்வாக்குப் பெற்றிருந்தமைக்கு, அக்கால சிற்பங்களும், ஓவியங்களும் குறிப்பாகச் சிங்களமொழியிலுள்ள சந்தேசய - தூதுப்பிரபந்தங்களும் பிறவும் சான்று பகருகின்றன. ஆனால் இக்கலைகள் தமிழரின் தனிச்சிறப்பையே காட்டுவன. இவை யும், தமிழுமே தமிழரின் தனித்துவத்தினை நன்கு பிரதிபலிப்பன. எனவே, இவை நன்கு போற்றிப் பேணி வளர்க்கப்பட வேண்டியவை.

பண்ணிசையும், அதைத்தொடர்ந்து வளர்ச் சியுற்ற கர்நாடக இசையும், பரதநாட்டியமும் தமிழகத்திலிருந்து இலங்கைக்குப் பரவி நிலவி வந்துள்ளன. காலம்தோறும், தமிழகத்தில், இவற்றிலேற்பட்ட மாற்றங்கள் அவற்றின் தாக் கத்தினை இங்கும் ஏற்படுத்தி வந்துள்ளன. யாழ்ப்பாணத்தமிழரசிலும் இக்கலைகள் நன்கு போற்றப்பட்டன. பின் போத்துகீசர், ஒல்லாந் தர் ஆட்சிக்காலங்களிலேற்பட்ட சுதேசக்கலை அழிவுக்கொள்கையாலும், அரச ஆதரவு இன் மையாலும், பிறவற்றாலுமிவை நன்கு கீழ்நிலை யடைந்து நலிவுற்றன. தமிழ்நாட்டில், இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலேற்பட்ட கலைமறு மலர்ச்சி - குறிப்பாக பரதக்கலை மறுமலர்ச்சி யின் தாக்கம் இங்கும் ஏற்பட்டது. இதுவரை போதிய அளவு சான்றுகள் கிடைக்காவிடினும் சிறுதொகையிலான தேவதாசிகளும், பிறகலை ஞரும் தொடர்ந்து 17,18,19,20ம் நூற்றாண் டுகளிலும் யாழ்ப்பாணத்திலே வாழ்ந்து வந்த னர் எனலாம். கலைமறுமலர்ச்சியின் விளை வாக, குறிப்பிட்ட சமுகத்தினரே பெரும்பாலும் கற்றுவந்த கலைகளைப் பிறரும் கற்றுத் தேர்ச்சி பெற்றனர்.

காலம்தோறும் இலங்கைக்கலைஞர் தமிழ கம் சென்று கலைகளைக் கற்றனர். ஒருசாரார் அங்கு தங்கினர், மற்றவர்கள் திரும்பிவந்து இங்கு கலைகளைப் பரப்பினர். தமிழகக்கலை ஞர் சிலர் இங்கும் வந்து சில காலம் தங்கிப் பின்னர் திரும்பினர். வேறு சிலர் இங்கு தங்கி விட்டனர். தமிழ், சைவம், வடமொழி முதலிய துறைகளில் ஏற்கனவே திருநெல்வேலி சுவாமி ஞானப்பிரகாசர், ஆறுமுகநாவலர், காசிவாசி செந்திநாதஐயர், சுவாமிவிபுலானந்தர் முதலி யோர் குறிப்பாகத் தமிழ் நாட்டிலே நன்கு புகழ் பெற்றனர். இவர்களைப்போல இந்த நூற்றாண் டிலே தவில் வித்துவான் திரு. காமாக்ஷிசுந்தரம், திரு. தக்ஷிணாமூர்த்தி போன்ற கலைஞர்கள் தமிழகத்திலே பெரும் புகழ் பெற்றனர். இந்த நூற்றாண்டிலே இங்கு வாழ்ந்த கலைஞர்களிலே நாதஸ்வரம், தவில் கலைஞர்களைப் போன்று ஏனைய கலைஞர் அதிகம் புகழீட்டியதாகத் தெரியவில்லை. இதற்கான சில காரணங்களும் உண்டு. இக்கலைஞர் தொடர்ச்சியான சாதகம் செய்பவர்கள். மங்கள வாத்தியக் கலைஞர்க ளாக இவர்களுக்குக் கோவில்களிலும், பலவைப வங்களிலும் இன்றியமையாது பங்குபற்றும் வாய்ப்பும், வருவாயும் உள்ளன. ஏனைய கலை- கள் பலவற்றிலும் பார்க்க இவர்களின் கலை கள் குறிப்பிட்ட குடும்பங்களிலே பாரம்பரிய மாக நிலவிவந்துள்ளன.

பேராசிரியர் **வி. சிவசாமி**

ஏற்கனவே குறிப்பிட்டவாறு இசை, நடனக் கலைகளிலே ஆர்வமும், திறமையுமுள்ள கலை ஞர்கள் காலம்தோறும் இருந்து வந்துள்ளனர். இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலும் நடுப்பகு தியிலும் பிரபல தென்னிந்தியக் கலைஞர் சிலர் வந்து கச்சேரிகள் செய்து திரும்பினர். எடுத்துக் காட்டாகப் பரதக்கலைஞரான ஸ்ரீமதி பால சரஸ்வதி, பத்தணைநல்லூர் ஜயலக்ஷ்மி, கதக்களி கலைஞரான குருகோபிநாத், கர்நாடக இசைக் கலைஞர்களான ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி, எம். எல். வசந்தகுமாரி, டி. கே. பட்டம்மாள், திரு. வி. வி. சடகோபன் முதலியோரைக்குறிப் பிடலாம். இவர்களின் கலைநிகழ்ச்சிகள் ஒரு சாராருக்குப் புதிய ஆர்வத்தையும், ஊக்கத் தினையும் ஏற்படுத்தின. இலங்கை சுதந்திரம டைந்ததைத் தொடர்ந்து கலைகளிலே புதிய

ஆர்வம் ஏற்பட்டது. இந்த நூற்றாண்டின் எழுபதுகளிலே கல்வித்திட்டத்திலே அழகியற் கல்வி அழுத்திக் கூறப்பட்டதினைத் தொடர்ந்து கலைகளில் மேலும் ஆர்வமேற்பட்டதெனலாம்.

பொதுவாகக் குருகுலமுறைப்படி கற்பிக்கப்பட்டு வந்த இக்கலைகள் சிறப்பாக நிறுவன ரீதியாகவும் கற்கப்படலாயின. இதனாலே தனிப்பட்ட கலைஞரின் நிறுவனங்களில் அல்லது வீடுகளில் மட்டுமன்றி அரசாங்க ஆதரவிலான நிறுவனங்கள், பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், பல்கலைக்கழகங்கள் முதலியனவற்றிலும் கற்பிக்கப்படலாயின. இவ்வகையிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக்கழகம், மட்டக்களப்பு விபுலானந்தர் இசைக்கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, வடஇலங்கைச் சங்கீத சபை முதலியன குறிப்பிடற்பாலன.

எனினும் பண்ணிசை, கர்நாடகஇசை, பரத நாட்டியம் முதலியன எதிர்பார்த்த அளவு தமிழகத்தைப்போன்று இலங்கையில் வளர்ந்துள்ளனவா என்பது சந்தேகமே. நாதஸ்வரம், தவில் கலைகள் இதற்குப் புறநடையெனலாம். கலைகள் இங்கு நன்கு வளராமைக்குப் போதிய அளவு அரச ஆதரவு இன்மையும், கலைகளை ஆதரிக்கும் பெருந்தொகையான பிற புரவலர்கள் இல்லாமையும் சில முக்கியமான காரணங்களாக இருக்கலாம். இவற்றைவிட, இக்கலைகள் வளருவதற்கான அடிப்படைச் சூழ்நிலை குறிப்பாகப் பாகவதர் மரபுகள் இல்லாமையும் கவனித்தற்பாலது. எனினும் கலைஞர்களின் ஆர்வமும், ஈடுபாடும், ரசிகர்களின் ஆதரவும் உள்ளன. கலைஞர்கள் கலைகளின் செயல்முறையிலேதான் கூடுதலாக ஈடுபடுகின்றனர். சாஸ்திரத்தில் அந்த அளவிற்கு ஈடுபாடும், ஞானமும் உள்ளனவா என்பதும் ஐயமே. கலைவளர்ச்சிக்குச் செயல்முறை ஞானம், திறன் மட்டுமன்றிச் சாஸ்திர ஞானமும் சம அளவுக்கு முக்கியமே. இல்லாவிடில் குறிப்பிட்ட கலையினை வளர்க்க முடியாது. காலத்திற்கு ஏற்ற மாற்றங்களை மரபுகளை மீறாது செய்வதற்கும் இவையிரண்டும் அவசியமே. கலைஞர்களுக்கான அர்ப்பணமும், சாதகமும் இங்கு ஒப்பீட்டுரீதியிலே குறைவாகவே காணப்படுகின்றனவாகக் கூறப்படுகின்றது. 1945ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்து இசைக்கச்சேரிகள் நிகழ்த்திய பிரபல தமிழக இசைக்கலைஞர் வி. வி. சடகோபன் சமகால யாழ்ப்பாணக் கலைஞர்பற்றிக் கூறியுள்ளவை நினைவு கூரற்பாலன. அவையாவன ''இலங்கை வித்துவான்களா? அவர்களுக்கு நல்ல ஞானம் உண்டு. ஆனால் அதை வளர்க்கவேண்டும் என்ற எண்ணம் கிடையவே கிடையாது. ஏதோ எல்லாம் படித்துவிட்டோம் என்ற மட்டில் அவர்களுக்கு திருப்தி. அவ்வளவுதான். ஆனால் தமிழ்நாட்டில் அப்படியல்ல. எந்தக்கலைஞனும் தனது திறமையில் திருப்தியடைவதில்லை. பூரணநிலையடையவேண்டும் என்ற விருப்ப மிகுதியால் அவர்கள் நாள்தோறும் ஏதோ பயின்று கொண்டேயிருக்கிறார்கள். இலங்கையில் அப்படியிருப்பதாகத் தோன்றவில்லை''. சுமார் அரை நூற்றாண்டு கடந்தும் திரு. சடகோபனின் அவதானிப்புகள் ஓரளவாவது பொருத்தமாகவே தென்படுகிறது எனலாம். எனவே, கலைஞர்களுக்கு அர்ப்பணமும், தொடர்ச்சியான சாதகமும் அவசியமே. முதுநிலைக்கலைஞர்கள் கௌரவிக்கப்படுவதுடன், இளங்கலைஞர்களை ஊக்கப்படுத்தலும் அவசியமே. ஏனெனில், பின்னையவர்களே வருங்காலத்துப் பெரிய கலைஞராக விளங்குபவர்கள் ஆவர். எனவே, பாடசாலைகளிலும், கலைநிறுவனங்களிலும், கோவில்களிலும் இக்கலைகள் நன்கு இடம்பெற வேண்டியவை. இவற்றினை ஊக்குமுகமாகச் செய்கைமுறைப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் குறிப்பிட்ட கால அளவுக்குள்ளே நடத்தப்படவேண்டும். திறமையாகச் செய்வோருக்குப் பரிசுகளும், மேலும் கற்பதற்கான ஊக்குவிப்புகளும் அளிக்கவேண்டும். செய்கை முறையுடன் சாஸ்திரமும் வலியுறுத்தப்படவேண்டும். கலைவிழாக்கள் தக்க காலங்களிலே பலஇடங்களிலே ஒழுங்குபடுத்தப்படவேண்டும். கலைகளிலே சிறந்த தேர்ச்சியுள்ளவர்களுக்குச் சிறந்த விருதுகளும், மானியங்களும் வழங்கப்படவேண்டும். இதற்குக் குறிப்பாக அரச ஆதரவும் அவசியமாகும். சாஸ்திரவரம்பினை மீறாது புதிய ஆக்கங்கள் காலத்திற்கு ஏற்றவாறு உருவாக்கம் செய்வோரை நன்கு கௌரவிக்கவேண்டும். அதேவேளையிலே கலைஞர் மத்தியிலே பொறாமையும் தேவையற்ற போட்டிகளும் தவிர்க்கப்படவேண்டும். மக்கள் மத்தியிலே கலைகள் நன்கு பரவும் வகையில் கலைஞர்களும், புரவலர்களும் செயற்படவேண்டும். நவீன வசதிகளடங்கிய கலை அரங்குகள் சில கேந்திர இடங்களிலாவது அமைக்கப்படவேண்டும். கலைரசனையினைப் பரவலாக்கவேண்டும். வானொலி, தொலைக்காட்சி முதலியனவற்றிலே தரமான கலைநிகழ்ச்சிகள் நன்கு இடம்பெற வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளினாலும், அணுகுமுறையினாலும் கலைகள் வளர வாய்ப்புகள் பல ஏற்படலாம்.

# இதுவே இன்றைய நியதி

ஒற்றுமையன்று உயிரெனக் கொண்டோம் ஓங்கியதே வாழ்வு
சத்தியம் தர்மம் நிலைத்திட நின்றோம் சரிநிகர் சமமானோம்
பூட்டிய ஒருமைப் பண்பு உடைந்ததே........
புதுப்புது ஆசைகள் தினமும் எழுந்ததே........
வேற்றுமை தனிலே தீமைகள் விளையுதே!
வேறுவே றெனப்பல கூறுகள் பெருகுதே!

ஒன்றே குலமென்போம்! ஒருதாய் சேயென்போம்!
நன்றே யதுசெய்வோம்! யாவும் பொதுவென்போம்!

ஒன்றாய் கிடந்து உருண்ட உலகம்
பாடம் பாடமாய் ஆனதே
நன்றே செய்து வாழ்ந்த மானிடன்
யாவும் அவன்செயல் ஆனதே
ஆடி யடங்கும் வாழ்வை மறந்தவன்
அல்லவை செய்ய ஓடுகிறான்
நாடுகள் எல்லாம் கோடுகள் கிழித்தே
கேடுகள் மலிந்திட மாழுகிறான்

காலம் மனிதனைப் பிரித்திட வில்லை
கடவுளும் அதனை வகுத்திட வில்லை
மனிதனில் மனிதன் வேற்றுமை கண்டான்
வறுமையும் போரும் பற்றிட நின்றான்
மக்களின் பிரிவால் எல்லைகள் பெருகுதே!
மதங்களின் பிரிவால் நல்லவை சரியுதே!
இனங்களின் பிரிவால் நாடே அழியுதே!
இதுவே இன்றைய நியதியு மாகுதே!
இதுவே இன்றைய நியதியு மாகுதே!

— கவிஞர் வெல்லவூர்க் கோபால்

# பாதைகள்

கவிச்சுடர் அன்பு முகையதீன்

பாதைகள் சீராய் இல்லை!
பயணங்கள் செய்வதற்கு

பாதைகள் எல்லாம் இன்று
பழுதடைந் துள்ள போது
எப்படி பயணம் செய்து
இடத்தினை அடைதல் கூடும்?

பாதையில் கற்கள், முள்ளு
பள்ளங்கள், குப்பை, மேடு
சேறுகள், நாய்கள், கள்ளர்
செல்லவே முடிய வில்லை!

பாதைகள் சீராய் இல்லை
பயணங்கள் செய்வதற்கு

பாதைகள் இட்டோர் இந்தப்
பாரினில் வாழ்வோர் பற்றி
எதுவுமே சிந்தி யாமல்
ஏன் இதை இட்டு வைத்தார்?

பாதைகள் எல்லாம் இன்று
பழுதடைந் துள்ள போது
மாடிகள் கட்டி நாங்கள்
மகிழ்வதில் என்ன கண்டோம்?

பாதையில் உள்ள மேடு
பள்ளங்கள் திருந்தி விட்டால்

வேதனை மறந்து மக்கள்
வேகமாய் நடந்து செல்வார்
பாதையில் முதலில் உள்ள
பள்ளத்தைத் திருத்த வேண்டும்!

# சில அவதானிப்புகள்

## ஈழத்து உடனிகழ்கால இலக்கியம்

இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் தமிழர், முஸ்லிம்கள், மலாயர், போத்துக்கேய / ஒல்லாந்த வம்சாவளியினர்.

ஈழத்து இலக்கியம் என்று திட்டவட்டமாக இனங்காணக் கூடிய, இலக்கிய முயற்சிகள், இலங்கை சுதந்திரமடைந்த பின்னரே துரிதமாக வளரத் தொடங்கியது. கடந்த பத்துப் பன்னிரெண்டு ஆண்டுகளாக தமிழில் எழுதப்படும் முயற்சிகளை, நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், விமர்சனம், ஆய்வு என்ற வகைகளுக்குள் அடக்கலாம்.

கடந்த தசாப்த காலத்தில் கணிசமான எண்ணிக்கையுடைய புதிய ஈழத்து எழுத்தாளர்கள் தோன்றியிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர், இலங்கைக்கு வெளியேயிருந்து ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலிய கண்டங்களிலிருந்தும், கனடாவிலிருந்தும் எழுதுகிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள், போராட்ட இயக்கங்களைச் சேர்ந்தவர்களாகவும், சார்புள்ளவர்களாகவும் இயங்கிவருகின்றனர்.

ஐம்பதுக்கும் மேற்பட்ட சிற்ரேடுகள் ஈழத்து இலக்கியத்தைப் பிரகடனஞ்செய்து வெளிநாடுகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. நூல் வடிவமாகவும் பல புத்தகங்கள் வெளியாகிவருகின்றன. இவற்றை வகுத்துத் தொகுத்து மதிப்பீடு செய்தாலன்றி முழுமையாக ஈழத்து இலக்கியம் எவ்வாறு கடந்த தசாப்த காலங்களில் வெளிப்படுத்தப் படுகிறது என்பதை மதிப்பிட முடியாது.

தமிழ் நாட்டிலே, செ. யோகநாதன், செ. கணேசலிங்கம் ஆகிய இருவரும் நிறைய நூல்களை வெளியிட்டிருக்கிறார்கள். எனவே, இவர்களுடைய பெயர்கள் தமிழ் நாட்டு வாசகர்களில் சிலருக்குப் பரிச்சயமானவை. இவர்களை விட இன்னும் பலரின் நூல்கள் தமிழ் நாட்டிலேயே வெளியாகிய போதும், வாசகர்களிடத்தில் பிரபல்யம் பெறவில்லை.

நமது நாட்டில், உடன்நிகழ்கால இலக்கிய முயற்சிகள், பருவகால ஏடுகள், பல்கலைக்கழக ஏடுகள், சஞ்சிகைகள், தினசரிகளின் வார இதழ்கள் ஆகியவற்றில் வெளிவருகின்றன. இவை யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், வெளியேயுமிருந்து வெளியாகின்றன. பெரும்பாலான எழுத்தாளர்கள் யாழ்ப்பாணப் பகுதிக்கு வெளியேதான் வசித்து வருகின்றனர். ஈழத்து எழுத்தாளர்களில் பெரும்பாலானவர்கள் பல்கலைக் கழகங்களிலோ, பாடசாலைகளிலோ ஆசிரியத் தொழில் புரிந்து வருகின்றனர். வேறு சிலர் அரசாங்க / தனியார் துறை நிறுவனங்களில் பணிபுரிந்து வருபவர்கள்.

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் எழுத்தாளர்களின் படைப்புகளைப் படிக்கும் வாய்ப்பு, கொழும்பு போன்ற இடங்களில் வசிப்பவர்களுக்கு கிட்டுவதில்லை. அதுபோல, ஏனைய இடங்களில் வசிப்பவர்களின் எழுத்துக்களை யாழ்ப்பாண வாசகர்கள் படிக்கக்கூடிய வாய்ப்பும் இல்லை. ஒரு சிலரின் படைப்புகள் விதிவிலக்கு.

## கே. எஸ். சிவகுமாரன்

**இலங்கையில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஈழத்து இலக்கிய முயற்சிகளை 60 களிலிருந்து நெறிப்படுத்தி வந்துள்ளனர். கடந்த தசாப்த காலத்தில் இவர்களின் செல்வாக்கு குறைந்தபோதிலும், ஓர் அரை நூற்றாண்டாக, இந்தப் பல்கலைக்கழக மட்டத்தினர் சுவாமி விபுலானந்தர் காலம் தொட்டு அளப்பரிய சேவை செய்து வந்துள்ளனர்.**

'முற்போக்கு' எழுத்தாளர்களாகப் பெரும்பாலானோர் இருக்கும் அதேவேளையில் மு. தளையசிங்கம், எஸ்.பொன்னுத்துரை போன்ற குறிப்பிடத்தக்க எழுத்தாளரும் தமது பங்களிப்புகளைச் செய்து வந்துள்ளனர்.

இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்திலும், எல்லைக் கட்டான அனுபவங்களையே எழுத்தாளர்கள் எதிர்நோக்கவும். அனுபவிக்கவும் நேரிடுவதனால் அந்தந்த மாவட்ட இலக்கியங்களின் அடிநாதமாக சில அம்சங்கள் தென்படுகின்றன.

உதாரணமாக, யாழ்ப்பாணத்தில் சாதிப் பிரச்சினை, ஆயுதப் படையினரின் அட்டகாசங்கள் காரணமாக மக்கள் படும் துயரங்கள் போன்றவை சித்தரிக்கப் படுகின்றன.

மட்டக்களப்பு எழுத்தாளர்கள் தமிழ்நாட்டு ஜனரஞ்சக எழுத்தாளர்களின் கற்பனைகளை ஆதர்சமாகக் கொண்டு எழுதுகின்றனர்.

அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் சற்றே ஆழமாக வாழ்க்கையை நோக்கி எழுதுகின்றனர்.

திருகோணமலைப் பகுதி எழுத்தாளர்கள் ஜனரஞ்சகமாக எழுதுகின்றனர்.

மலையக எழுத்தாளர்கள் தேயிலைத் தோட்டவாழ் மக்களின் துயரங்களை வடிக்கின்றனர்.

கொழும்பு மாவட்ட எழுத்தாளர்கள் நகர வாழ்க்கையைச் சித்தரிக்கின்றனர்.

பெண்ணியம் தொடர்பாக எஸ். கணேசலிங்கன் உட்படப் பல பெண் எழுத்தாளர்கள் நிறைய எழுதிவருகின்றனர்.

ஆக்க இலக்கியத் துறையில் கலை நுட்பம், அனுபவச் செறிவு, ஆழமான தத்துவம் போன்றவை குறைவாகக் காணப்பட்டாலும், ஆய்வுத் துறையில் ஈழத்து விமசகர்கள் முன்னோடிகளாக விளங்கி வருகின்றனர்.

## கல்வி பற்றி.........

சுவாமி விபுலாநந்தர்

ஆசிரியரின் தரத்திலேயே கல்வி முறையும் அதன் அபிவிருத்தியும் தங்கியுள்ளதென்பதும், கல்வி சம்பந்தமான திட்டமிடலில் ஆசிரியர் தொழிலுக்கேற்ற இயல்புவாய்ந்தவர்களை நியமனம் செய்வதும், அவர்களுக்குச் சிறந்த பயிற்சி அளிப்பதும், மிக முக்கியமானவை என்றும் கூறியுள்ளார். ஆசிரியரின் பொறுப்புணர்ச்சி மிகமிகப் பெரிதாகும். ஆசிரியர் தொழிலுக்கு பன்னூற்பயிற்சி இன்றியமையாத சாதனம். உளநூற்பயிற்சியும், உளவியல் பற்றிய அறிவும் ஆசிரியர்களுக்கு அவசியமாகும். கற்பித்தலில் ஆசிரியர் மாணவர் தொடர்பு மிக இறுக்கமானதாகவும், இணக்கமானதாகவும் அமைந்திருக்க வேண்டும். மாணவரின் உள்ளார்ந்த பூரணத்துவத்தை வெளிக்கொணரும் வகையிலான கற்பித்தல் முறையே அடிகளாரால் பெரிதும் வேண்டப்பட்டது. இவ்விடயத்தில் சுவாமி விவேகானந்தர் கல்விக் கொள்கைகளினால் அடிகள் பெரிதும் கவரப்பட்டிருந்தார் என்பது தெளிவாகத் தெரிகின்றது. இலக்கியம், விஞ்ஞானம் போன்ற பாடங்கள் எவ்வாறு போதிக்கப்படல் வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். இலக்கியம் கற்றலுக்கும், கற்பித்தலுக்கும் கற்பனாசக்தி முக்கியமானது என்பது அவரது கருத்தாகும். ''சுவையோடு கூடிய மெய்ப்பாடு வாசிப்போரது உடலத்தில் சிறிது தோற்றுதல் வேண்டும் - உயர் குணங்களையும் செயற்கருஞ் செயல்களையும் நோக்கி உள்ளமானது உருகுதல்வேண்டும்.'' செய்யுளைப் பயிற்றும்போது மாணவர் அதனை நெட்டுருப்பண்ண வற்புறுத்தக்கூடாது. என்றும் கூறியுள்ளார். விஞ்ஞானக் கல்விப் போதனை வேதாந்தக் கொள்கை அடிப்படையில் மேற்கொள்ளுதல் மேலானது என்றும் புலக்காட்சி முறையிலான பரிசோதனை முறையே தேவையென்றும் கருதினார். விஞ்ஞானத்தைப் போதிக்கும் முறையானது கூர்ந்த அவதானிப்பினதும், சோதனையினதும் அனுபவரீதியாகப் பெறும் முறை என்றும் குறிப்பிட்டுள்ளார். வரலாறு கற்பித்தல் பற்றிக் கூறும்போது முதலில் நம் நாட்டின் வரலாற்றிற்கும் அடுத்து அண்டை நாடுகளின் வரலாற்றிற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டுமென்றும், அதன் பின்னரே ஏனைய நாடுகளின் வரலாறு கற்பிக்கப்படல் வேண்டும் என்றும் அடிகளார் கூறியுள்ளார்.

# மனுவிட்டு ஈசன் போனான்

மானுடம் என்ப தென்ன
மண்ணிலே நடப்ப தென்ன
ஊனுடல் உயிரும் போற்றி
உன்னத வாழ்வு கண்டு
நானிலம் போற்றும் வண்ணம்
நல்லறம் காத்து வாழ்தல்
தானலோ மானுட மாம்
சான்றுகள் நூல்கள் கூறும்

அன்புடன் கூடி வாழ்ந்து
அயலவர் துயரைப் போக்கி
துன்பங்கள் சூழும் போது
சுற்றமாய் உதவி செய்து
பின்னிடும் வாழ்வில் சிக்கல்
பிணைந்துள வேளை தன்னில்
தன்னையும் தியாகம் செய்யும்
செயலலோ மனிதப் பண்பு

மனிதரின் இதயம் தன்னுள்
வந்து இறை உறைவதாலே
மனிதனை ஈசன் சேர்த்து
மனு (ஈ) சன் என்பர் சான்றோர்
மனிதனின் இதயம் தன்னுள்
மாயையும் புகுந்த தாலோ
மனுவிட்டு ஈசன் போனான்
மனுதத்துவம் மாண்டு போச்சு.

* கேணிப்பித்தன் *

# கவின் கலையும் அதன் நிலையும்

அழகியற் கலைகள் சமுதாயத்திற்கு பல வகைகளிலும் விழிப்புணர்ச்சியைத் தருவன. காந்தியடிகள் அரிச்சந்திரா என்ற நாடகத்தை பார்த்த பின்னர்தான் வாழ்க்கையில் பொய் பேசுவதில்லை என்று திடசங்கற்பம் பூண்டதாக குறிப்பிட்டுள்ளார். புராணங்களில் கைலை-நாதனை வயப்படுத்த இராவணேஸ்வரன் காம்போதிராகத்தை பாடியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சரஸ்வதியும், நாரதரும் இசைக் கருவிகளுடன் இணைந்து காணப்படுவதும், இந்திரலோகத்தில் நந்திதேவர் இருப்பதுபற்றி குறிப்பிடப்படுவதும் அழகியற் கலைகளை சமய ரீதியா அங்கீகரித்துள்ளன. மேலும் சிவனை நடராஜர் என்றும் தில்லையிற் கூத்தனென்றும் குறிப்பிடுவதன் மூலம் அழகியற் கலை எம்மவர் மத்தியில் எவ்வாறு போற்றிப் பேணப்பட்டது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

தொழில்நுட்பமும் இலத்திரன் சாதனங்களும் நிறைந்து, இசையையும் ஏனைய அழகியற் கலைகளையும் ஒளி வடிவிலும், ஒலி வடிவிலும் பதிவு செய்யும் இந்த நவீனயுகத்தில் இளைய தலைமுறையினரால், எமது அழகியற் கலைகளை எமது மூதாதையர் எவ்வாறு பேணிக் காத்து வளர்த்துத் தந்துள்ளனர் என்பது இலகுவில் புரியாது. உதாரணமாக எந்தவிதமான ஒலிப்பதிவு வசதிகளும் இல்லாத காலத்தில் ராகங்களையும் அதன் உருப்படிகளையும் பரம்பரை பரம்பரையாக செவி வழி மூலம் எமது மூதாதையர் நவீன உலகத்திற்கு தந்து சென்றமை வியத்தற்குரியது. இன்று நாம் அன்றாடம் கேட்டுக்கொண்டிருக்கும் கலைஞர்களின் குரல் ஓசைகள் அவர்கள் அமரர்களாகியும் எமது காதருகே ஒலிக்கின்றன. ஆனால் 1920 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆண்டாண்டு காலமாக இசையில் மூழ்கி இசையை வளர்த்த அரிய கலைஞர்களை - பாடகர்களை எம்மால் அறிந்து கொள்ள முடியாது. நாம் வாழும் இன்றைய சூழல் கலைஞர்களைப் பற்றி சிந்திக்க முடியாதவாறு மாறிப் போயிருக்கின்றது. இருப்பினும் நடனத்தைப் பொறுத்தவரை சில வரலாற்றுச் சுவடுகள் எமக்குக் கிடைத்துள்ளன. சிலப்பதிகாரம் பேசும் மாதவியும், சோழ மன்னர்களின் கல்வெட்டுக்களும், சைவக் கோவில்களை அண்டி வாழ்ந்த தாசி குலத்தவரின் கர்ண பரம்பரைக் கதைகளும் எமது நடனக் கலையின் பாரம்பரியங்களை ஓரளவு தந்து நிற்கின்றன.

— சி. பற்குணம் —

ஈழத்தில் எமது அழகியற் கலைகளின் தற்போதைய நிலை பெரும் கவலையளிப்பதாக உள்ளது. அழகியற் கலை பற்றி ஒவ்வொருவரும் சிந்தித்துக்கொண்டிருக்கும் பொழுது அதனுடைய வளர்ச்சி தவிர்க்க முடியாத காரணங்களினால் பின்னடைந்து செல்கின்றது. யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இராமநாதன் அக்கடமியை உள்வாங்கிக் கொண்டதுடன் கவின் கலைகளை வளர்ப்பதற்கான பிரயத்தனங்களை முன்னெடுத்துச் சென்றது. கிழக்குப் பல்கலைக்கழகம்கூட இவ்வாறான முற்சிகளில் ஈடுபட்டுவந்துள்ளது. விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியும் தனது பங்களிப்பை அழகியற் கலைக்கு ஆற்றி வந்துள்ளது. ஆனால் நாட்டின் அரசியல் மற்றும் சமூகச் சூழ்நிலைகள் அழகியற் கலைகளின் வளர்ச்சியைத் தொடர்ந்தும் பின்னடையச் செய்து கொண்டிருப்பது வேதனைக்குரிய விடயமாகும். எமது கலைஞர்கள் உரிய முறையில் கௌரவிக்கப்படவில்லை, எமது கலைகள் உரிய முறையில் சில தனியார்களால் பயிற்றப்படுவதில்லை. அழகியற் கலைகள் அறிமுகப்படுத்தப்படும் பொழுது சில நிறுவனங்கள் வேண்டுமென்றே மிகத் தரக் குறைவான நிகழ்ச்சிகளை அரங்கேற்றி எமது அழகியற் கலைகளை கொச்சைப்படுத்தி வருகின்றன. சில அரைவேக்காட்டுக் கலைஞர்கள் ''கண்டதே காட்சி கொண்டதே கோலம்'' என்று சில நிகழ்ச்சிகளை கோணங்கித்தனமான நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதுடன் வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் மூலம் அவற்றை அங்கீகரிக்க அங்கலாய்கின்றார்கள். பொதுவாக நடனக் கலை இவ்வாறான அவல நிலையில் அமிழ்ந்து போயுள்ளது. இவ் அவலத்தை - அழகியற் கலைகளுக்கு ஏற்படும் அவமானங்களை தட்டிக் கேட்பதற்கு எவருக்கும் திராணி இல்லை. இக் கோமாளிகள் கூட்டங்களுக்கு பின்னணியில் அரசியல் அதிகாரம் இருந்து வருவதும் ஒரு முக்கிய காரணமாகும்.

நடனத்தில் சில உதாரணங்களைக் குறிப்பிடுவது இங்கு பொருத்தமானது. பாரதியாரின் ''ஓடிவிளையாடு பாப்பா'' பகுதியின் அம்சங்களைப் பிரதிபலிப்பதான நடன நிகழ்ச்சி இலங்கையில் வெகுஜனத் தொடர்பு சாதனமொன்றில் காண்பிக்கப்பட்டது.

''ஓடி வருகையிலே கண்ணம்மா
உள்ளம் குளிருதடி''

இப்பாடல் நடை பழகும் ஒரு சிறு குழந்தை ''தத்தக்க பித்தக்க'' என நடந்து வரும் பொழுது காணப்படும் அழகை வர்ணிப்பதாகவோ அல்லது ஒரு குழந்தை வேகமாக ஓடி வருவதையோதான் பொதுவாக குறித்து நிற்கின்றது. அண்மையில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி - ஒரு நடன நிகழ்ச்சியில் இப் பாடல் வரிகள் அபிநயிக்கப்பட்ட பொழுது வரிகளுக்காக அபிநயித்த நடனமாலது ஒருவர் ஒலிம்பிக் பந்தயங்களில் அதிவேகமாக ஓடுவது போன்ற பாவனையைச் செய்தமை பார்ப்போருக்கு அருவருப்பைத் தந்தது. ஒரு கவிஞனின் உள்ளக்கிடக்கைகளை உணராது தடி எடுத்தவர்கள் எல்லோரும் சண்டைக்காரர்களாக, நடன ஆசிரியர்கள் நடந்து கொள்வது விசனிக்கத்தக்கது. நடன ஆசிரியர்கள் தமிழ் அறிஞர்களிடம் ஆலோசனைகளைக் கேட்க வெட்கப்படுகின்றார்களா? அல்லது தமக்கிருக்கும் பாண்டித்தியம் போதுமானது என்று இறுமாப்புக் கொள்கின்றார்களா? என்பது புரியவில்லை. ஆனால் மொத்தத்தில் எமது கலைகளும் அவமானப்பட்டு சீரழிவு பெறுகின்றன. இன்னொரு கட்டத்தில் ''பின்னலைப் பின்னின்று இழுப்பான்'' இக் கவிதை வரிகள் ஒரு குறும்புக்கார சிறுவனின் (வாலிபன் அல்ல) விளையாட்டுத்தனமான நடவடிக்கைகளைப் பற்றிக் கூறுவதாகும். சமீபத்தில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் சுமார் 15 வயது பெண்ணும், ஏறக்குறைய அதே வயதைக்கொண்ட கண்ணனும் நடனமாடினார்கள். தெருவில் போகின்ற ஒரு பெண்ணினுடைய பின்னலை ஒரு 15 வயது வாலிபன் பிடித்து இழுத்தால் நிலைமை விரசமாக இருக்குமே தவிர - முடிவு விபரதமாக இருக்குமே தவிர அது ஒரு சிறுவனின் குறுமாக இருக்கவே முடியாது. பாடல்களின் கருத்துக்களை முற்றாக உணராத உதிரிகள் நடனத்தை பயிற்றுவிப்பதால் அவை தொலைக்காட்சியில் ஒலிபரப்பப்படுவதால் தமிழரது அழகியற் கலைகளின் நிகழ்வுகளைக் கண்டு தலைகுனிய வேண்டியுள்ளது. இவற்றின் அடிப்படைத் தாற்பரியங்கள் என்னவென்றால் ஆயிரக்கணக்கான வருடங்களாக வளர்க்கப்பட்ட - புடமிடப்பட்ட, சர்வதேசரீதியாக புகழ் பரப்பும் எமது அழகியற் கலைகளை மலினப்படுத்திக் காட்டுவதற்கு ஒரு சதி பின்னணியில் முளைகின்றது. அச் சதிகாரரின் கொடுப்பனவுகளில் வயிறு வளர்க்கும் எமது அரைவேக்காட்டுக் க (கொ) லைஞர் கூட்டம் இச் சதிக்கு ஒத்தூதுகின்றது. எமது அழகியற் கலைகளின் பெறுமானங்களில் நம்பிக்கை வைத்திருக்கும் உள்ளங்கள் இந் நிலை கண்டு நிரந்தர வேதனை அடைகின்றன. எமது கலைகளின் உன்னத நிலை பற்றி அறியாதவர்கள் இவற்றைத் தொலைக்காட்சியில் கண்டு இவைதான் தமிழர்களின் கலை என்று சலித்துக் கொள்கிறார்கள்.

எமது நாடகங்கள் இன்று எல்லா வகையிலும் ஏதோ ஒரு வகையில் பக்கம் சார்ந்தவையாகவே இருக்கின்றன. சுதந்திரமான கருத்தினங்களைக் கொண்ட நாடகங்களைப் போடுவதற்கு அனுமதியில்லை. ''உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்'' என்ற சுதந்திர உணர்வுள்ள கம்பீரம் எமது கலைஞர்களிடம் இருந்து பறிக்கப்பட்டுவிட்டது. புராண நாடகங்கள்கூட உத்தியோகபூர்வமற்ற தணிக்கைகளுக்கு உள்ளாகின்றது. நாடகக் கலைஞர்கள் அல்லது நாடகத்தை எழுதுபவர்கள் தம்மை பாதுகாப்பதற்கான நிலைமைகளை அனுசரித்தே நடந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. வடக்கு கிழக்கு பகுதிகளில் நாடகங்களை அரங்கேற்றுகின்ற வசதிகள் கலைஞர்களிடம் இல்லை. இத்துடன் நாடகங்களைப் பார்ப்பதற்கான சூழ்நிலையில் எமது மக்களும் இல்லை. முழு இரவும் விழித்திருந்து நாடகங்களைக் கண்டு களித்த எம் மக்கள் இருட்டியதும் ஊரடங்கு வாழ்வு வாழ்கின்றார்கள். நாடகங்களை பகலில் அரங்கேற்ற முடியாது. இரவில் பார்வையாளரை பார்த்துக் களிக்கும்படி நிர்ப்பந்திக்க முடியாது. நாடகத்திற்கான அனுமதி, போக்குவரத்து வசதி என்பன முடியாத காரியங்களாகிவிட்டன. மேலும் தமிழ்நாட்டில் இருந்து வரும் விரசங்களை விபரிக்கும் வீடியோ படங்கள் ஏதோ ஒரு வகை பொழுபோக்காக எம் மக்களுக்கு திணிக்கப்பட்டிருக்கின்றன. பழகிப்போன ஒரு வாழ்க்கை முறையினின்றும் மக்களை மீட்டெடுப்பது சிரமமானதே. ஆனாலும் இம் மக்களை விரசமான கலை ரசனையினின்றும் மீட்டெடுத்து சூனியத்துள்கொண்டுசெல்ல முடியாது. இதனால் கலைஞர்கள் குழம்பிப் போயிருக்கின்றார்கள்.

அரசாங்கம் அழகியற் கலையை சகல பாட சாலைகளுக்கும் கொண்டு சென்று அவற்றைத் தேசிய ரீதியாக அறிமுகப்படுத்தி வளர்க்க முற் படுகின்றது. இதற்கான ஆசிரியர் தேர்வுகள் நடைபெறுகின்றன. ஆனால் மிகத் துரதிஷ்ட வசமாகத் நகரப்புற பாடசாலைகளே கலைத் துறை ஆசிரியர்களின் சேவையைத் தொடர்ந்தும் பெறுகின்றன. கிராமப்புற பாடசாலைகளுக்கு பல்வேறு காரணங்களால் இத்தகைய ஆசிரியர் கள் கிடைக்காமல் போய் விடுகின்றார்கள். அழ கியற் கலைகளில் பிரபலமானவர்கள், அவர்கள் ஆசிரியர்களாக இருப்பினும் நகரப்புறங்களில் அவர்கள் இருப்பதே அவர்களது புகழை பேணிப் பாதுகாக்க உதவுகின்றது. பண வருமானம் இதற்கான முக்கிய காரணம் அல்ல என்பதை அங்கு குறிப்பிடல் வேண்டும். நகரப்புறங்களில் கலைஞர்களுக்கு இருக்கின்ற வரவேற்பு மகாத் தானது. அரங்கியலின் சகல தேவைகளுக்கும் கலைஞர்கள் அழைக்கப்படுகின்றார்கள்; பாராட் டப்படுகின்றார்கள். கிராமப்புறங்களில் இத் தகைய வாய்ப்புக்கள் இல்லை. மேலும் நகரப் புறங்களில் கலை நிகழ்ச்சிகள் பெருமளவிற்கு வணிகமயப்படுத்தப்பட்டுள்ளதால் இவ் ஆசிரி யர்கள் நகரப்புற பாடசாலைகளில் இணைந்து கொள்ளல் புகழுக்கும் ஓரளவு பண வருமானத் துக்கும் வழி காட்டுகின்றது. நகரங்களிலும்கூட வளங்கள் கூடிய பாடசாலைகள் தான் கலைத் துறையில் திறமைகொண்ட ஆசிரியர்களை ஏதோ ஒரு வகையில் பெற்றுவிடுகின்றன. கிரா மப்புற பாடசாலைகளில் மாணவர் தொகை குறைந்திருப்பதாலும் குறிப்பிடத்தக்க தொகை யான பாடசாலைகள் 6ம் ஆம் ஆண்டு வரை யோ அல்லது 9ம் ஆண்டு வரையோ மட்டும் வகுப்புகளைக் கொண்டிருப்பதால் இவ் ஆசிரி யர்களுக்கு தமது திறமையை மாணவர்கள் மூலம் வெளியே காட்டுவது கடினமானதாக உள்ளது. மேலும் கிராமப்புற பாடசாலைகளில் வேறு கலைஞர்களின் உதவிகளை குறிப்பாக வாத்தியக் கலைஞர்களின் உதவிகளை பெற்றுக் கொள்வது நடனம் மற்றும் சங்கீத ஆசிரியர் களுக்கு முடியாததாக உள்ளது. இதனால் எமது கிராமத்து வளங்கள் குறிப்பாக கலை வளங்கள் வெளிக் கொணரப்படாது தேங்கிப்போய் அழிந்து விடுகின்றன. அண்மைக் காலங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட கொத்தணி முறை பிசு பிசுத்துப் போனதால் இருக்க இருந்த வாய்ப்புக் களையும் கிராமத்து மாணவர்கள் இழந்துபோய் விட்டார்கள். கவின் கலைகளில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு உரிய சந்தர்ப்பங்கள் கிடைக் காமல் போவதைவிட கிராமத்துக் கலைகள் வளர்க்கப்படுவதற்கான சூழ்நிலைகள் அருகிக் கொண்டு போவது வேதனைக்குரிய விடய மாகும்.

எமது பாரம்பரியங்கள், மரபுகள் பல்வேறு சக்திகளால் சிதைவடைந்து செல்கின்றன. இவற் றை மீட்டெடுக்க விசுவாசமான பிரயத்தனங்கள் வேண்டும். எமது கலைப் பொக்கிசங்களை பேணிக்காத்து அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்க வேண்டும். உள்நாட்டுப் போரையும், அரசியல் சூழ்நிலைகளையும் நிரந்தர சாட்டாக கூறிக்கொண்டிருக்க முடியாது. மாணவர்களே கல்விக்கூடங்களே எமது கலைகளில் திறவுகோல் களாக ஏணியின் நென்புகளாக பணியாற்ற வேண்டும். இளையதலைமுறையினர் சிதைவ டைந்த கலைகளை நெட்டுருப்போட வழிவிடலா காது. உண்மையான கலை வடிவங்களை எமது இளைய தலைமுறையினருக்கு நாம் அடையாளம் காட்டியாக வேண்டும். அக் கலைகளை வளர்ப் பதற்கு வழிமுறைகளையும் காட்ட வேண்டும். கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் பொருந் தாது. எமது பல நூற்றாண்டுகால பாரம்பரியங் களை தொடர்ந்தும் பேணிக்காக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும். கலை என் பது ஒரு விளையாட்டுப் பொருளல்ல, கேளிக்கை நிகழ்வும் அல்ல, அது மனிதனை மனிதனாக்கும் உன்னத சக்தி படைத்தது; என்பதை ஒவ்வொரு வரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

# கம்பராமாயணத்து வானரர்கள் குரங்குகளல்லர் வாலுள்ள மனிதர்களே

கல்வியிற் பெரிய, கவியிற் பெரிய கவிச்சக்கரவர்த்தி கம்பனின் இராமாயணத்தில் கம்பனுக்கே சவாலாக அமைந்த பிரச்சனை வாலி வதை என்று சொன்னால் அது மிகையில்லை. வான்மீகரின் வாலி மோட்சத்தைக் கம்பன் வாலி வதையாக்கி, வாலிக்கும், இராமனுக்குமிடையே வாதப் பிரதி வாதங்களை நடாத்திச் சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறான்.

வாலிக்கு இராமன் அம்பெய்ததை நியாயப் படுத்துவதற்காக இப்பகுதியை விரிவு படுத்திய கம்பன், வாலியை மிகப்பெரிய பலங்கொண்டவனாகப் படைத்து, பலசிறந்த வரங்களைப் பெற்றவனாகக் காட்டியதும், வாலியை குரங்கல்ல என்று நிரூபிக்க முயல்வதும் வாலி வதைச் சிக்கலுக்கு அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன.

கம்பராமாயணத்தில் கம்பனின் கவிக் கூற்றாகவும், பாத்திரங்களின் வாயிலாகவும், வாலி, சுக்கிரீவன், அனுமான், தாரை போன்றவர்கள் குரங்குகளாகவும், வானரர்களாகவும் இருவிதமாக அழைக்கப் படுகின்றனர். கம்பராமாயணத்தை ஆழமாக, நுணுக்கமாக, ஆராய்ந்து பார்த்தால் இவர்கள் குரங்குகளல்லர் என்பது தெளிவாகப் புரியும். இவர்கள் உண்மையில் வாலுள்ள மனிதர்களே. நரர் என்றால் மனிதர் என்று பொருள். வால் உள்ள நரர் வானரர்.

சகல வகையிலும் மனிதரைப் போன்ற உடலமைப்பைக் கொண்டு வாலை மட்டும் மேலதிகமான உறுப்பாகக் கொண்டவர்களாக இவர்களைக் கருதிக் கொள்ளலாம், என்பதற்குப் போதிய சான்றுகள் கம்பராமாயணத்திலே உண்டு.

கம்பன் இவ்வானரைக் கூட்டத்தினரைச் சில இடங்களில் அற்பமான, பித்துப் பிடித்த குரங்குகளாகவும், சில இடங்களில் வானரர்களாகவும் காட்டுவதே கிஸ்கிந்தா காண்டத்தில் வரும் வாலி வதைச் சர்ச்சைக்கு ஆதார சுருதியாக அமைகிறது.

வாலி, சுக்கிரீவன், அனுமான்:

வாலி, சுக்கிரீவன் ஆகிய இருவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். ''இங்கு வருபவர் யாவரும் பெண் வடிவமடைக'' என்று சாபமிடப்பட்டிருந்த இடத்திற்குச் சென்ற 'ருக்ஷ ரஜஸ்' என்னும் வானர ராஜன் பெண்குரங்கு வடிவமடைய, அதாவது வானரப் பெண்ணாக மாற, அவ்வானர வனிதையின் வாலினழகைக் கண்டு காமுற்ற தேவேந்திரன் மூலமாக வாலியும், கழுத்தினழகைக் கண்டு காமுற்ற சூரியன் மூலமாக சுக்கிரீவனும் பிறந்தார்கள் என்று, சே. கிருஷ்ணமாச்சாரிய சுவமிகளின் கிஸ்கிந்தா காண்ட உரையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## தமிழ்மணி அகளங்கன்

எனவே வாலி சுக்கிரீவர்கள் வானரைப் பெண்ணுக்குத் தேவர்கள் மூலமாகப் பிறந்த பிள்ளைகளாவர். இதையே பின்னால் இராமனும் வாலியிடம் ''நீங்கள் குரங்குகளல்ல. நலங்கொள் தேவரிற் தோன்றினீர்கள்'' என்று சொல்லிக் காட்டுகிறார்.

அனுமான், கேசரி என்னும் வானர ராஜனது மனைவியான அஞ்சனா தேவிக்கு வாயுபகவானின் அனுக்கிரகத்தால் பிறந்தவன். ''நான் காற்றின் வேந்தற்கு அஞ்சனை வயிற்றின் வந்தேன். நாமமும் அனுமன்'' என்று அனுமான் தன்னை இராமனிடம் அறிமுகப்படுத்தும்போது சொல்கிறான்.

இவர்கள் ஆடை ஆபரணங்களை அணிந்தனர். நல்லறிவு பெற்றிருந்தனர். வாலி இராமனோடு வாதிடும் போது, மனுதர்ம சாத்திரம் பற்றியும், யுத்த தர்மம் பற்றியும், அரசியல் நெறி பற்றியும் மிக அழகாகச் சொல்லி விவாதிக்கிறான். அதே வேளை தாம் குரங்கு என்றும், தமக்கு மானிட ஒழுக்கநெறி இல்லையென்றும் கூறுகிறான். ஆனால் இராமரோ

அந்த இடத்திலே அவனைப் பார்த்து நீங்கள் விலங்குகளல்ல என்று நியாயங் காட்டுகிறார். ஆனால் இலக்குவன் சுக்கிரீவனைப் பற்றி இகழ்ச்சியாகப் பேசும் போது இராமன் ''இப் பித்தாய விலங்கின் ஒழுக்கினைப் பேசலாமோ'' என்று பதில் கூறுகிறார். இந்தக் குழப்பம் பல இடங்களிலும் காணப்படுகின்றது.

இவ்வானரர்களின் போர்முறை மனிதர்களது போரைப் போன்றதில்லை என்றும், நகங்களால் கிழிபடுதலும், பற்களால் கடிபடுதலும், வாலினால் ஒருவரை ஒருவர் வரிந்து கட்டி இழுபடுதலும், பெரிய கல்மலைகளைப் பெயர்த்து ஒருவர்மேல் ஒருவர் வீசி எறிபடுதலும் மரங்களைப் பிடுங்கி அடிபடுதலும், இவர்களின் யுத்த முறை என்றும் கம்பர் வாலி சுக்கிரீவனின் யுத்தம் மூலம் காட்டுகிறார்.

இராவணனை அனுமான் குத்துச் சண்டைக்கு அழைத்ததாகத்தான் யுத்த காண்டம் கூறுகிறது. குரங்குகளாகச் சொல்லப்படும் இவ்வானரர்கள் உண்மையில் வாலுள்ள மனிதர்களே என்பதற்கு வாலியின் மனைவியாகிய தாரையை உதாரணமாக எடுத்து அவளைப் பற்றி ஆராய்வோம்.

தாரை:

சுக்கிரீவன், இராமரின் ஆலோசனைப்படி வாலியை அறைகூவிப் போருக்கழைக்கிறான். மதம் பிடித்த யானையின் பிளிறல் ஒலியைச் சிங்கம் கேட்கின்ற நிலையில் வாலியானவன் கேட்டு, ''வந்தேன் வந்தேன்'' என்று சத்தமிட்டுக் கத்தியபடி புறப்படுகிறான்.

அவனது மனைவியான தாரை என்பவள் அவனைத் தடுக்கிறாள். அவனுக்கு என்றொரு மனைவி வீட்டிலிருக்கும் போது அவனைக் குரங்காகச் சொல்லுதல் பொருந்துமா?கம்பராமாயணத்தில் கம்பன் தாரையை அறிமுகப்படுத்தும் இடமே இதுதான். கம்பன் பின்வருமாறு அறிமுகஞ் செய்கிறான்.

> ஆயிடைத் தாரைஎன்று அமிழ்தில் தோன்றிய
> வேயிடைத் தோளினாள் இடை விலக்கினாள்
> வாயிடைப் புகைவர வாலி கண்வரும்
> தீயிடைத் தன்னெடுங் கூந்தல் தீகின்றாள்.

தாரையைத் தேவாமிர்தம் போலக் காணப்படுபவள் என்றும், மூங்கிலைப் போன்ற தோள்களைக் கொண்டவள் என்றும் சொல்லி வாலியின் கண்களிலிருந்து வரும் கோபாக்கினியிலே தனது நீண்ட கூந்தல் எரிந்து போகின்றவளாகவும் தாரையைக் கம்பன் காட்டுகிறான்.

மூங்கிலைப் போன்ற தோள்கள், நீண்ட கூந்தல் என்பவை குரங்குகளுக்குரிய இலட்சணங்களல்ல. கம்பனின் கவிக் கூற்றாக வந்த இப்பாடல் போலப் பல பாடல்களில் தாரையைக் கம்பன் மனிதப் பெண்ணாகவே காட்டுகிறான்.

அவளது கூந்தலை தாழ்குழல், வார்குழல், விரைக்குழல், புரிகுழல், நெடுங்கூந்தல், என்றும் சொல்வதோடு கண்களை வேல் விழி, என்றும் கழுத்தைப் பூகக் கழுத்து (கமுகு) என்றும், இடையை நுண்ணிடை என்றும், காலிலே நூபுரம் என்னும் அணிகலனை அணிந்திருந்தாள், இடையிலே மேகலை என்னும் அணிகலனை அணிந்திருந்தாள் என்றும் கம்பன் காட்டுகிறான்.

அதுமட்டுமன்றி அவளது குரலைக் குயில் போன்றது என்னும் பொருளில் ''குயின்மொழி'' என்றும் சொல்வதோடு ''இசையிலும் இனிய சொல்லாள்'' என்றும், புல்லாங்குழல், யாழ், நல்ல வீணை என்பவற்றின் ஓசையை விடச் சிறந்த இனிமையான ஓசையோடு வாலியின் இறப்புக்கு இரங்கி அழுதாள் என்றும் கம்பன் காட்டுவது கவனிக்கத்தக்கது.

பாத்திரங்களின் வாயிலாகப் பார்க்கும் போது, வாலி தன்மனைவி தாரையை ''மலைக்குல மயில்'' என்று அழைப்பதைக் காணலாம். அதாவது மலையிலே வாழுகின்ற சிறந்த மயில் என்பது இதன் பொருள். பெண்களை மயிலுக்கு உவமிப்பது மயில்த்தோகை போன்ற நீண்ட கூந்தலைக் கொண்டிருப்பதனாலேயே ஆகும்.

தாரை மங்கல அணி அணிந்திருந்தாள், என்பதும் வாலி இறந்த பின்பு மங்கல அணியை நீக்கி மற்றும் சுமங்கலிகளுக்குரிய ஆடை ஆபரணங்கள் மலர் சூடுதல் முதலானவற்றைத் தவிர்த்திருந்தாள் என்பதையும் கம்பராமாயணத்தில் காணக்கூடியதாக இருக்கிறது.

கார் காலம் முடிந்ததும் சீதையைத் தேடுவதற்காக வந்து சந்திப்பதாகக் கூறிய சுக்கிரீவன் அரச போகத்தில் ஆழ்ந்திருந்த போது கோபங்

கொண்ட இராமன் இலக்குவனை கிஸ்கிந்தைக்கு அனுப்புகிறான். கோபாவேசத்தோடு வரும் இலக்குவனைச் சமாதானப்படுத்த தாரை மற்றும் வானரப் பெண்களையும் அழைத்துச்சென்று வழிமறிக்கிறாள். அவர்கள் எல்லோரையும் பெண்களாகக் கண்டு இலக்குவன் செய்வதறியாது குனிந்து நிற்கிறான்.

மங்கல அணியை நீக்கி
மணியணி துறந்து வாசக்
கொங்கலர் கோதை மாற்றிக்
குங்குமஞ் சாந்தங் கொட்டாப்
பொங்குவெம் முலைகள் பூகக்
கழுத்தொடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல்
நயனங்கள் பனிப்ப நைந்தான்.

மங்கல அணி, மற்றும் இரத்தினாபரணங்கள் அணியாது, வாசனை வீசுகின்ற பூமாலையைக் கூந்தலிலே சூடாது, குங்குமம், சந்தனம் என்பவை அணியப்படாத மார்பகங்களைக் கமுகு போன்ற கழுத்தோடும் நன்றாகப் போர்த்திய முந்தானையோடு நின்ற தாரையைக் கண்ட இலக்குவன் கண்களில் நீர்த்துளிகள் தோன்றக் கவலைப்பட்டான் என்கிறான் கமபன்.

தாரையைப் பார்க்கும் போது இலக்குவனுக்குத் தனது தாயாரின் நினைப்பு வந்ததாம். தனது தந்தை தசரதன் இறந்த பின்பு தனது தாயாகிய சுமித்திரையும், பெரியதாயாகிய கோசலையும் இருக்கின்ற அமங்கலித் தோற்றமாகிய விதவைத் தோற்றம் போல இருந்தது அவனுக்கு.

இனையராம் என்னை ஈன்ற
இருவரும் என்ன வந்த
நிலைவினால் அயர்ப்புச் சென்ற
நெஞ்சினன் நெடிது நின்றான்.

என்று கம்பன் காட்டுகிறான். கைகேயி மேல் உள்ள கோபத்தில் இலக்குவன் கைகேயி பற்றிக் கவலைப் படவே இல்லை. அதனால் இருவரைப் பற்றி மட்டுமே நினைத்துக் கவலை அடைகின்றான்.

அது மட்டுமன்றி அந்தத் தாரையுள்ளிட்ட வானரக் கூட்டங்களுக்குள்ளே இலக்குவன் நின்ற நிலையைக் கம்பன் அற்புதமாகப் பின்வருமாறு சித்தரிக்கிறான்.

தாமரை வதனம் சாய்த்துத்
தனுநெடுந் தரையில் ஊன்றி
மாமியர் குழுவில் வந்தானாமென
மைந்தன் நிற்ப......

தாமரை போன்ற முகத்தைக் குனிந்தபடி, வில்லைத் தரையில் ஊன்றியபடி, மாமியர் கூட்டத்திற்குள்ளே வந்த ஒரு உத்தமமான ஆண் மகன் என்று சொல்லக் கூடிய வகையில் நாணிக் கோணி நின்றான் இலக்குவன் என்று காட்டுகிறான் கம்பன்.

எனவே இலக்குவனுக்குத் தாரையையும், ஏனைய வானரப் பெண்களையும் பார்க்கும் போது மானிடப் பெண்களைப் போன்ற காட்சியே தென்படுகின்றது என்பதற்கு இதுவே போதிய சான்றாகும்.

ஆனால் கம்பன் வாலி வதைப்படலத்தில் தன் கூற்றாகவும் வாலி கூற்றாகவும், இலக்குவனின் கூற்றாகவும், இராமனின் கூற்றாகவும், மாற்றி, மாற்றி இவ்வானரர்களை அற்பமான ஊர்ந்து திரியும் பித்துப் பிடித்த குரங்குகளாகவும், மனிதத் தன்மை கொண்டவர்களாகவும் காட்டுவது பலருக்கும் குழப்பத்தை உண்டு பண்ணியிருக்கிறது.

இவ்வானரர்களது முகங்கள் கூட குரங்குகளின் முகங்களைப் போன்றவை அல்ல. அனுமானின் முகம் மட்டும் மனித முகத்திற்குரிய இலட்சணமற்ற குரங்கு முகம் போல விளங்கியது. உருத்திர அம்சமாகிய அனுமான் குழந்தைப் பருவத்திலே இளஞ் சூரியனை கனிந்த பழம் என்று பிடிக்கப் பாய்ந்த பொழுது, அதனை அறிந்து சினந்த இந்திரன் தனது வச்சிராயுதத்தினால் முகத்திலே அடித்தான்,

அதனால் அவனது கன்னங்கள் சிதைந்து பேயின. அனுமான் என்பது கன்னம் சிதைந்து போனவன் என்ற வட மொழிப் பொருளைக் கொண்ட வார்த்தையாகும்.

அனுமானின் கன்னம் சிதைந்து போனதனாலே அழகிழந்து குரங்கின் முகத்தைப் போன்ற முகம் அவனுக்கு ஏற்பட்டது. அனுமான் இராமாயணத்தில் பெரும் புகழ் பெற்றதன் காரணமாகவும், அனுமான் வானரக் கூட்டத்தில் ஒருவன் என்பதனாலும், வானரர்களின் முகங்கள் எல்லாம் அனுமாரின் முகத்தைப் போலவே இருக்கும் என்று கருதி வானரர்களை குரங்கு முகம் கொண்டவர்களாகக் கருதுகின்ற வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்.

கம்பனின் இராமாயணப்படி இவர்கள் குரங்குகளா! மனிதர்களா! என்பதைத் திடமாகச் செல்ல முடியாத சிக்கல் ஏற்பட்டிருப்பது பலருக்கும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

வானரர்கள் வாலுள்ள நரர்களே. அதாவது வாலுள்ள மனிதர்களே. குரங்குகள் அல்லர்.

# தமிழும் தமிழரும்

தமிழுக்கும், தமிழருக்குமான புதிய வரலாற்று நூல்களையும், அரசியல் நூல்களையும் இயற்றுதல் நமது தலையாய கடமையாகும். தமிழரது பழைய வரலாற்றினைப் பற்றிய சிற் சில முடிபுகள் தொல்காப்பிய எழுத்ததிகார நச்சினார்க்கினியருரை, இறையனார் அகப்பொருள் நக்கீரனார்உரை, சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லாருரை என்னும் இவை தம்முள்ளே காணப்படுகின்றன. இம்முடிபுகள், வரலாற்று நூலாசிரியர் ஆராய்ந்து கண்ட சரித்திர முடிவுகளோடு ஒத்திருக்கின்றன. தமிழரது நாகரிகம் மிகப் பழமை வாய்ந்தது. உலக சரித்திரத்திலே தமிழரே முதல்முதல் நாகரிக வாழ்க்கை எய்திய சாதியாரென்பதற்கும், கடல்கடந்து சென்று தமது நாகரிகத்தைப் பலப் பல நாடுகளிலும் பரப்பினர் என்பதற்கும், வணிகத்துறையிலும் கணித நூல், வான நூல் முதலிய எத்துறைகளிலும்வல்லுநராயிருந்தார்களென்பதற்கும் பலசான்றுகள் கிடைத்திருக்கின்றன. ஆதலாற் பள்ளியில் பயிலும் தமிழ்ச்சிறார் முதல் பல்கலை கற்றுத் தேறிய முதுதமிழ்ப் புலவர் ஈறாக அனைவரும் தமிழ்க்குலத்தாரின் உண்மை வரலாற்றினை உளங்கொண்டுணர்தற்கு வேண்டிய சிறியவும் பெரியவுமாகிய வரலாற்று நூல்கள் பல, தமிழ் மொழியிலே எழுதப்படவேண்டும். இதுவே நாம் செய்ய வேண்டிய தமிழ்த் தொண்டுகளுள்ளே முதலில் வைத்து எண்ணுதற்குரியதென்பது எனது உள்ளக்கிடக்கை. கடல்கொண்ட அத்திலாந்திக் நிலப்பரப்பு, தெங்குமரமும், யானையுமுடையதாயிருந்ததெனக் கூறப்படுதலின் கடல் கொண்ட குமரிநாட்டின் வரலாறே மத்திய அமெரிக்காவினின்று ஐரோப்பாவினை அடைந்தஞான்று கடல்கொண்ட அத்திலாந்திக் வரலாறாக உருத்திரிந்ததெனக் கொள்வதும் ஏற்றது. இவைபோன்ற முடிபுகளையெல்லாம் வரலாற்று நூற்றுறையிலே வல்லுநராயுள்ளோர் காய்தல், உவத்தல் அகற்றி நடுவுநிலைமையோடு ஆராய்ந்து பொருட்டொடர் நிலையிலமைத்து நூல்வடிவாக்கித் தருதல் வேண்டும். பல வகைப்பட்ட கலைத்துறைகளுள்ளே உலக சரித்திரமானது சமூக வாழ்க்கையின் இன்றியமையாத சாதனமாக உள்ளது. பல தேசத்து வரலாற்று நூல்களையும் படிப்பது நமது நாட்டினது முன்னேற்றத்திற்காக உழைப்பதற்கு வழிவகுக்கும். தமிழ்மொழியிலே பல தேச சரித்திரங்களையும் கூறும் நூல் இல்லாத குறையை நாம் நிவிர்த்தி செய்தல் வேண்டும்.

சுவாமி விபுலாநந்தர்.

# ஆத்மீகம் செறிந்த கல்வியே அர்த்தமுள்ளது

1. கல்வியே கருந்தனம்:

ஒரு நாட்டின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் அத்திவாரமாக அமைவது அந்தநாட்டின் கல்வித்திட்டம் என்பதில் எவருக்கும் கருத்துவேற்றுமை இருக்கமுடியாது. மனிதவள பயன்பாட்டுக்கும் மனித வாழ்க்கை மேம்பாட்டுக்கும் வழி வகுப்பது கல்வி தான். அதன் காரணமாகவே ஒவ்வொரு நாடும், தனது வருமானத்தின் பெரும் பகுதியைக் கல்வி வளர்ச்சிக்காகச் செலவிடுகிறது. எமது நாட்டில் கல்வியறிவு பெற்றவர்கள் 85 வீதம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை, நாட்டு வருமானத்தின் 20 வீதம் கல்விக்காகச் செலவிடப்படுகிறது. இலவசக்கல்வியும் ஏழை மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்கள் இலவச உடை இலவச மதிய போசனம் என்பனவும் இலங்கையில் மட்டும் அறிமுகமான சில வசதிகள்.

அதுமட்டுமல்ல ஆரம்பக்கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை அரசாங்கம் மாணவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது. 5ம் வகுப்பு புலமைப் பரிசில், க.பொ.த. வகுப்பு புலமைப்பரிசில்கள், பல்கலைக்கழகக் கல்விக்கான மகாபொல புலமைப்பரிசில்கள் என, கல்வியில் ஆர்வம் உள்ள மாணவர்கள் எவ்வித தடையுமின்றி கல்வியில் உயர்வதற்கு, சகல வாய்ப்பு வசதிகளும் இலங்கையில் இருக்கின்றன.

முன்பு கல்விக்கென ஒரு அமைச்சு மட்டுமே இலங்கையிலிருந்தது. இன்று உயர்கல்விக்கு எனத் தனியானதொரு அமைச்சும் உள்ளது. ஆசிரியர் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பயிற்சிக்கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் முதலியன உயர்கல்விப் பீடங்களாகக் கணிக்கப்படுகின்றன. பல்கலைக்கழகமே உயர்கல்வியின் தலைமைப் பீடமாகின்றது. ஒரு மாணவன் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றுவிட்டால், உயர்கல்வி பெற்ற ஒரு பெருமகனாக அவன் கருதப்படுகிறான். அறிவாளி என்றும் கணிக்கப் படுகின்றான்.

2. இன்றைய உயர்கல்வி:

இவ்வாறு, இந்நாட்டு மக்களை கட்டம், கட்டமாக வடிகட்டி பல்கலைக்கழக பிரவேசத்துக்குத் தகுதிபெறுபவர்களைத் தேர்ந்தெடுத்து, அங்கும் அவர்களுக்குச் சில வருடங்கள் ஆழமான அறிவை ஊட்டி, பட்டதாரிகள் எனப் பெயர் சூட்டி இந்த நாட்டுப்பணிக்காகத் தேர்ந்தெடுக்கிறது நமது அரசு. ஆனால் ஆரம்ப வகுப்புகளில் கல்வி கற்கும்போதும், க. பொ. த (சா/த) வகுப்புக்கு வரும்போதும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கும் மாணவர்கள், உயர்கல்வித் தகுதி பெற்று, பல்கலைக்கழகங்களில் இருக்கும்போதும், அக்கல்வியைப் பூர்த்தி செய்து பட்டதாரிகளாக வெளியேறும் போதும் மேற்படி பண்புகளை மறந்து விடுவது மிகவும் துரதிர்ஷ்டமானது.

— அன்புமணி —

நமது உயர்கல்வித் திட்டத்தில் எங்கோ ஒரு குறைபாடு இருக்கிறது என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. இக்குறைபாடு பற்றி இதுவரை எந்தக் கல்விமானும் ஆழமாகச் சிந்திக்காமல் இருப்பதும்; இக்குறைபாட்டை நீக்குவதற்கு வழிவகைகளைக் காணாமல் இருப்பதும் கவலைக்குரியது.

மாணவர் அமைதியின்மை பல்கலைக்கழகத்தில் மட்டும் கருக்கட்டுவது ஏன்? கீழ்படியாமையும், ரௌடித்தனமும் அங்கு உருவாவதேன்? ஒழுக்கம் தவறுவதும், ஒழுங்கீனம் வளர்வதும் ஏன்? தனது சக மாணவர்களான புதியவர்களை மனிதாபிமானமற்ற முறையில் இம்சிக்கும் 'றாக்கிங்' வளர்வது ஏன்? றாக்கிங் என்ற பெயரில் மாணவிகளை மானபங்கம் செய்யும் Sadism வளர்வது ஏன்? தமது கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் கல்லூரி உடமைகளை அடித்து நொருக்குவதும் விரிவுரையாளர்களை அறைகளில் பூட்டி வைப்பதும் ஏன்?

3. விவேகாநந்தரின் கல்விச்சிந்தனைகள்:

நமது உயர்கல்வி பற்றி இவ்வாறான கேள்விகள் எழும்போதும் தான் சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள் பற்றி - அக்கல்வியின் மேம்பாடு பற்றி நம் எண்ண அலைகள் ஆர்ப்பரிக்கின்றன.

கல்வி பற்றி அவர் சொன்ன சில கருத்துக் கள் வருமாறு:

கல்வி என்பது மனித உருவாக்கம் (Man-Making) கல்வி என்பது நன்னடத்தை (Character Building) கல்வி என்பது வாழ்க்கை விழுமி யங்கள் (Virtues of life)

இவ்வாறான ஒரு கல்விக்கு, விஞ்ஞானமும், மெஞ்ஞானமும் சமமாக இடம்பெற வேண்டும். மெஞ்ஞானம் இல்லாத விஞ்ஞானம் உயிரற்ற உடல் போன்றது; அவ்வாறே விஞ்ஞானம் இல்லாத மெஞ்ஞானம் உடல் அற்ற உயிர் போன்றது.

இக்கோட்பாடு பற்றி நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். ஆத்மிகம் மனிதனுடைய செயற்பாடுகள் புனிதமாவதற்கான ஒரு ஔட தமாகும். நவீன உலகில் அதன் மகத்துவம் உணர்ந்து கொள்ளப்படவில்லை, அதன் அவ சியம் தெரியவில்லை. நடைமுறை வாழ்க்கையில் அது புறக்கணிக்கப்பட்டு விட்டது. அதனா லேயே நமது உயர்கல்வி குறைபாடு உள்ளதாக இருக்கிறது.

எனவே ஆத்மீகத் கல்வி நமது உயர்கல்வி யுடன் இணைய வேண்டும். அதனுடன் இரண் டறக் கலக்க வேண்டும். ஆத்மீகக் கல்வி என்பது சமயக்கல்வி அல்ல; அது ஒரு மாணவனின் உள்ளத்தைப் புனிதப்படுத்தி அதில் தெய்வீ கத்தை நிறைக்கும் ஒரு அற்புதமான வழிமுறை ஆகும்.

ஆத்மீகக்கல்வி என்பது பாடப்புத்தகங்களுக் குள் இல்லை. அது ஒரு நடைமுறை வாழ்க்கைத் தத்துவம். இக்கல்விப் பயிற்சியினால், தன் முனைப்பு (Ego) ஒழிகிறது. சுயநல எண்ணம் (Selfish) குறைகிறது. அன்பு (Love) வளர்கிறது, தன்னம்பிக்கை (Self-Confidence) நிலைக் கிறது. மன உறுதி (Well) ஏற்படுகிறது. ஆத் மீகபலம் (Spiritually) எதிலும் வெற்றியைத் தருகிறது:

## 4. பழங்காலக் கல்வி முறை:

சுவாமி விவேகானந்தரின் மற்றொரு கூற்று, ''கல்வி என்பது கட்டிடங்கள் அல்ல. மேசை கதிரைகள் அல்ல; பரீட்சைகள் அல்ல; பாடப் புத்தகங்கள் அல்ல அது மனிதனுள் உறையும் ஆத்மீக சக்தியின் வெளிப்பாடு எனவே அவர் கூறினார். உன்னுள் உறையும் ஆத்மிக சக்தியை விகசிக்கச் செய் ஏனைய யாவும் அதைச் சுற்றித் தாமாகவே வந்துசேரும்''

நமது பாடப்புத்தகங்கள் மூலம் நாம் அறி வைப் பெறுகிறோம். ஆனால் பண்பைப் பெற வில்லை. நமது உயர்கல்வியில் உள்ள குறை பாட்டுக்கு இதுதான் மூல காரணமாக இருக்க வேண்டும்.

உயர்கல்விக் கோட்பாடுகள் மேற்கத்திய நாடுகளில் இருந்து நமக்குக் கிடைக்கின்றன. அவற்றை நாம் அப்படியே ஏற்றுக்கொள்கின் றோம். இவற்றின் அடிப்படையில் பேராசிரியர் கள் மாணவர்களை உருவாக்குகிறார்கள். அதே மாணவர்கள் பின்னால் பேராசிரியர்களாக மாறுகிறார்கள். அதனால் இந்த சுற்றுவட்டத் துக்கு வெளியே நம் சிந்தனைகள் செல்வதில்லை. உயர்கல்வியின் குறைபாட்டுக்கு இது மற்றொரு காரணமாகும்.

ஆனால் நமது பழங்காலக் கல்வி முறை களில், கல்விக்கோட்பாடுகள் வேறு அடிப்படை யில் அமைந்திருந்தன ஆத்மீகம் அக்கோட்பாடு களுக்கு ஆதாரமாக இருந்தது. அதனால், ஆதா ரக்கல்வி; குருகுலக்கல்வி நடைமுறைக்கல்வி முதலியன செழிப்புற்றன; சிறப்புற்றன; நிலை பெற்றன.

மாமன்னர்களுடைய புதல்வர்களும் ஏனை யோருடன் இணைந்து குருகுலக்கல்வியைப் பெற் றனர். இக்கல்வி போதனைக்கு கட்டிடங்கள் இல்லை; கதிரை மேசைகள் இல்லை. மரநிழல் களும் திறந்த வெளிகளுமே அவர்களுடைய கல்விக் கூடங்களாக இருந்தன. ஆசிரியர் மாண வர்களின் கடவுளாக மதிக்கப்பட்டார்.

பழங்கால கல்விமுறையில் எவ்வித குறை பாடும் இருக்கவில்லை யென்பதற்கு அவர்கள் விட்டுச்சென்ற ஆயிரக்கணக்கான அறிவி நூல்கள், இலக்கிய நூல்கள், வைத்திய நூல்கள், சாஸ்திர நூல்கள் முதலியன சான்று பகர்க்கின்றன.இவை எல்லாவற்றுக்கும் மேலாக தர்ம நெறியில் அவர் கள் நடாத்திய விழுமியம்செறிந்த வாழ்க்கை சான்று பகர்கின்றது. புராணங்களும் இதிகா சங்களும் அவர்களை ஒழுக்க சீலர்களாக்கியிருக் கின்றன. இதை சுவாமி விவேகானந்தர் அவர் களே மேற்கு நாடுகளுக்கு பகிரங்கமாக எடுத்துக் கூறியுள்ளார். அத்தகைய கல்வி வளர்ச்சிக்கு கல்விக் கூட்டங்கள் தேவைப்படவில்லை; வான ளாவிய கட்டிடங்கள் தேவைப்படவில்லை.

5. குருகுலக் கல்வி முறை:

இப்படிச் சொல்வதால், கல்லூரிகளும் சர்வ கலாசாலைகளும் மரநிழல்களிலும் திறந்த வெளிகளிலும், நடாத்தப்படவேண்டுமென்று அர்த்தமல்ல. கட்டிடங்களும் கதிரை மேசைகளும் இருக்கலாம். ஆனால் கல்விப் போதனா முறையில் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அம் மாற்றங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

(I) உயர்கல்வித் திட்டத்தில் ஆத்மீகம் இடம்பெறுதல் (II) நமது பண்பாட்டின் அடிப்படையில் கல்வி போதித்தல் (III) ஆசிரிய - மாணவ உறவு (IV) ஒழுக்கம் (Discipline) வலியுறுத்தப்படல் (V) மாணவரின் நடைமுறை வாழ்க்கை;

குருகுலக்கல்வி முறையில், ஒழுக்கம், பண்பாடு, கீழ்ப்படிவு பெரியோரைக் கனம் பண்ணல், குருவைத் தெய்வமாக மதித்தல், எளிமை இன்னா செய்யாமை, தன்னலம் ஒறுத்தல், பிறர்நலம் பேணுதல், போன்ற அம்சங்கள் இடம்பெறுகின்றன.

இவற்றைக் கல்லூரிகளிலும், சர்வகலாசாலைகளிலும் இடம் பெறச் செய்வது எப்படி? ஆரம்பக் கல்வியில் கட்டாய பாடமாக இடம் பெறும் சமயக்கல்வி, மேல் வகுப்புக்களிலும் தொடர வேண்டும். தொடர்வது மட்டுமல்ல கட்டாய பாடமாகவும் மாற வேண்டும். கல்லூரிகளிலும், சர்வகலாசாலைகளிலும் சமயக் கல்வி வெறும் பாடபோதனையாக இல்லாமல், பிரார்த்தனை, வழிபாடு, தியானம் என நடைமுறை அனுஷ்டானங்களாக அவை அமைய வேண்டும்.

சர்வகலாசாலைகளில் சமயக்கல்வி என்றவுடன் இன்றைய இளைஞர்கள் ஆச்சரியப்படக் கூடும். பேராசிரியர்களும் சிரிக்கக்கூடும். ஆனால் பழக்கப்படுத்திக் கொண்டால் எல்லாம் சரியாகிவிடும்.

6. ஆத்மீகத்தின் மறுவடிவமே மாக்ஸிஸம்:

மாணவர்கள், பல்கலைக்கழகங்களுக்கூடாக வெளிவந்ததும் அவர்கள் மீது மாக்ஸிஸ சாயை படிந்திருப்பது போன்ற ஒரு பிரமை ஏற்படுத்தப் பட்டு உள்ளது. இதில் எவ்வளவு தூரம் உண்மை உள்ளது என்பது சர்ச்சைக்குரியது.

மாக்ஸிஸத்தை ஆழமாக நோக்கினால் அது ஆத்மீகத்தின் மறுவடிவமே என்பது தெளிவாகும். இதையே சுவாமி விவேகானந்தரும் அழுத்தமாகக் கூறியிருக்கிறார். I am a Socialist ''நான் ஒரு சோஷலிஸ வாதி'' என்பது அவர் கூற்று. அவர் ஆத்மீகத்தின் பேரால் மேற்கொண்ட அத்தனை நடவடிக்கைகளும், சமதர்மத்தின் அடிப்படையில் அமைந்தவை. ஏழைக்கிரங்குதல், சாதி ஒழிப்பு, பசித்த வயிற்றுக்குச் சோறு என அவர் போதனைகள், சாதனைகள் அனைத்தும் ஆத்மீக அடிப்படையில் அதாவது மாக்ஸிஸ அடிப்படையில் அமைந்தவை.

எந்தப் பிரச்சினைக்கும் அமைதியான முறையில் தீர்வுகாண முடியும். அதையே ஆத்மீகம் போதிக்கிறது. அதர்மவழியில் சென்று தீர்வு காண முடியாது. வன்செயல் மூலம் தீர்வுகாண முடியாது. மாக்சிஸ வாதிகள் இதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அமைதி வழியில் தீர்வுகாணும் போது எதிரி நண்பனாகிறான் நமது கருத்தை ஏற்றுக்கொள்கிறான். நம்பக்கம் சேர்கிறான். நமது பலம் அதிகரிக்கிறது. வன்முறை வழியில் தீர்வு காணும் பொழுது, நண்பனும் எதிரியாகிறான். நமது கருத்தை ஏற்றுக்கொள்பவர்களும் நம்மோடு ஒத்துப்போவதில்லை. ஆத்மீக அணுகு முறைக்கும், மாக்ஸிஸ அணுகு முறைக்கும் உள்ள வித்தியாசம் இதுதான்.

7. ஆத்மீகம் காட்டும் பாதை:

உயர் கல்வியைப் பொறுத்தவரை சுவாமி விவேகானந்தர் முன்வைக்கும் கருத்துக்கள் சிந்தனைக்குரியவை. ''சமய உணர்வற்ற விஞ்ஞானம் முடமாகும், விஞ்ஞான உணர்வற்ற சமயம் குருடாகும்'' என அமெரிக்க ஞானி எமர்சன் கூறியதையே சுவாமி விவேகானந்தர் தனது கல்விச் சிந்தனைகளில் தெளிவுபடுத்தியுள்ளார்.

''தத்துவ உண்மைகளை, சமயம் ஆராய்கிறது. வேதியல், மற்றும் இயற்கை விஞ்ஞானம் பௌதிக உலகில் உண்மைகளை ஆராய்கிறது;'' என்பது சுவாமி விவேகானந்தரின் மற்றொரு கூற்று.

''ஒன்றுக்கொன்று ஆதாரமாக இந்த இரண்டு துறைகளின் ஆன்மிக சக்திகள் மனித வாழ்க்கையில் ஒன்றுபட வேண்டும்;'' இதன்

மூலம் முழுமையாக ஒருங்கிணைந்த மனிதர்கள் உருவாக்கப்படுவார்கள். இதன் விளைவாக பூரணத்துவம் வாய்ந்த மனித நாகரீகம் மலர உதவி கிடைக்கும்'' இக்கருந்து உயர் கல்வி போதனையில் முக்கியத்துவம் பெற வேண்டும்.

சுவாமி விவேகானந்தரின் இக்கூற்றைப்பற்றி சுவாமி ரங்கநாதானந்தாஜி மகராஜ் பின்வருமாறு மதிப்பீடு செய்தார். ''மனிதனின் அகவுலகத்தைச் சார்ந்த விஞ்ஞான உண்மைகள் எவ்வாறு பண்டைய இந்தியச் சிந்தனையில் கூறப்பெற்றுள்ளது என்பதைத் தற்காலத்தில் விளக்கிய சுவாமி விவேகானந்தரின் கருத்துகளும் இன்றைய விஞ்ஞான ஆய்விற்குப் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்'' இக்கருத்து ஆழ்ந்து சிந்தித்தற்குரியதாகும்.

இக்கருத்துக்களைத் தொகுத்து நோக்கினால், கல்வி என்பது வெறும் பாடப்புத்தகங்களுக்குள் இல்லை. அது ஆத்மீக விகசிப்பிலேயே தங்கியுள்ளது என்பது புலனாகும். இவ்வாறான ஒரு கோட்பாட்டை கல்வியில் புகுத்தி அதை உயர்கல்வி வரை வளர்த்துச் செல்வதன் மூலம் உயர்கல்வியைப் நெறிப்படுத்தலாம்.

தற்போதைய நிலையில் இக்கருந்து நடைமுறை சாத்தியமற்றதாகத் தோற்றலாம். ஆனால், ஸ்ரீராமகிருஷ்ணமிஷனிலும் சாயிசேவா சமித்தியின் மனிதமேம்பாட்டுக் கல்வியிலும் இச் சிந்தனைகள் வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன என்பது மனங்கொள்ளத் தக்கது

8. ஆளுமை வளர்க்கும் கல்வி:

ஆகவே ஆரம்ப வகுப்புகளில் மாணவர் மனதில் செறியும் நற்பண்புகள் அவர்கள் பல்கலைக்கழகம் சென்று பட்டதாரிகளாகப் பரிணமிக்கும் வரை தொடர வேண்டும்.

ஆரம்பக் கல்வியில் மாணவர் மனதில் சிறு விதைகளாக விதைக்கப்படும் இப்பண்புகள் அவர்கள் வளர்ந்து வாலிபர்களாகி, நாட்டின் சிற்பிகளாக மாறும்போது மேலும் வளர்ச்சி அடைந்து அவர்களைப் பண்புள்ள மனிதர்களாக மாற்ற வேண்டும். ''மாதாபிதா குரு தெய்வம்'' என்ற பாடம் பட்டதாரியின் மனதிலும் பதிந்திருக்க வேண்டும்.

''என்றும் பணியுமாம் பெருமை'' என்ற வாசகத்திற்கேற்ப பெருமை என்பது பணிவிலேயே தங்கியிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்'' அன்பு, அறநெறி, ஒழுக்கம், பண்பு, பணிவு இவையே உண்மையான கல்வியின் அறுவடை என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

எனவே இதுவரை கூறிய கருத்துக்களைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

(I) உயர் கல்வி என்பது உயர் பண்பு ஆக மாற வேண்டும்.

(II) விஞ்ஞானமும் மெஞ்ஞானமும் இணைவதன் மூலம், உயர் கல்வி பூரணத்துவம் பெறவேண்டும்.

(III) கல்வியின் மூலம் ஆளுமை வளரவேண்டும். ஆத்மீகம் விகசிக்க வேண்டும்.

(IV) பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றும் மகாகவி தாகூரின் சாந்திநிகேதனம் போல புனிதமான கலைக்கோயில் ஆக வேண்டும்.

(V) கல்வியின் வளர்ச்சிக்கேற்ப பண்புகளும் வளர்ச்சியடைய வேண்டும்.

(VI) படித்தவர்கள் என்றால் அவர்கள் பண்புள்ளவர்கள் என்ற நிலை உருவாக வேண்டும்.

# கடவுளாக மாறலாம்

- தம்பையூர்த் தங்கராசன்

சமய வாழ்க்கை எது வெனச்
சரியாய் புரியாததால்
குமையும் மனத்தோடு நாம்
குவலயத்தில் வாழ்கிறோம்.

★

கல்லைத் தெய்வம் ஆக்கி நாம்
காடு மேடு சுற்றுவோம்
உள்நின் றுணர்த்தும் தெய்வத்தை
உணரத் தவறித் தூற்றுவோம்.

★

தெய்வ பேதம் பேசியே
தெருவில் சண்டை பிடிக்கிறோம்
உள்ள தெய்வம் ஒன்றெனும்
உணர்வு அற்ற மூடர்நாம்.

★

புத்தர் யேசு முகமதென்று
புரிந்திடாமல் பேசுவோம்
அத்தன் ஒருவன் என்பதை
அறிந்திடாத ஜன்மங்கள்

★

தெய்வம் நமக்குள் உண்டென்னும்
தெளிவு வேண்டும் நமக்கெல்லாம்
உய்யும் வழி அஃதொன்றே
உயர்வு பெற்று வாழலாம்.

★

கடந்தும் உள்ளும் நிற்பவர்
கடவுளாகும் ஆதலால்
மறந்தும் பிறரை வருத்தாமல்
வாழவேண்டும் நாமெல்லாம்.

★

சொல்லும் செயலும் ஒன்றெனத்
தூயராக வாழ்ந்திட்டால்
கல்லும் கனிந்து கதை சொல்லும்
கடவுளாக மாறலாம்.

# சங்கமருவியகால இலக்கியப்போக்கின் தனித்துவக் கூறுகள்

காலந்தோறும் பல்வேறு மொழிகளின் இலக்கிய வரலாறுகளில் புதிய புதிய பரிமாணங்களும் தனித்துவக் கூறுகளும் இடம் பெற்று வளர்ச்சி பெறுவதுண்டு. தமிழ் இலக்கிய வரலாறும் இதற்கு விதிவிலக்கன்று. இவ்வரலாறு காட்டும் ஒவ்வொரு காலப்பகுதியும் ஒவ்வொரு வகையில் தனித்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது. இவ்வகையில், களப்பிரர் காலம், அல்லது சங்கமருவிய காலம் எனக் கூறப்படும் காலப்பகுதியும் தனக்கெனத் தனித்துவக் கூறுகளைக் கொண்டதாக வளர்ச்சிபெற்று வந்துள்ளது.

தமிழ் இலக்கிய வரலாற்றில், சங்க காலத்துக்கும், பல்லவர் காலத்துக்கும் இடைப்பட்டு விளங்கும் சங்கமருவிய காலப்பகுதி கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தைக் கொண்டது.

களப்பிரர் என்ற ஆட்சியாளரைக் கொண்ட அக்காலகட்டத்திலேயே தமிழ் நாட்டில் அரசு என்ற நிறுவனம் வளர்ச்சி பெறத் தொடங்கியது. சங்ககாலத்தில் மூவேந்தரும், குறுநில மன்னரும் சிறுசிறு நிலப்பிரிவுகளை ஆட்சி செய்து வந்தனர். அவ்வப்போது போர்களால் நில எல்லைகளில் மாற்றங்களும் புகுந்தன. காலப்போக்கில் மூவேந்தரும், குறுநில மன்னரும் வலிமை குன்றி களப்பிரர் என்பார் தமிழக அரசியலில் ஆட்சியாளர்களாக அறிமுகமாயினர். அவர்கள் காலம் முதலாகத் தமிழகத்திற் சிறுசிறு ஆட்சிப் பிரிவுகள் கலைந்து ஒருமுகப் பட்ட ஆட்சிமுறை வேரூன்றத் தொடங்கியது. அதனால், அரசு என்பது நிறுவனரீதியாக வளர்ச்சிபெறத் தொடங்குவதைக் காணமுடிகின்றது.

அதேவேளை, அதுவரையிற் தமிழ்நாட்டிற் பெருமளவு செல்வாக்குப் பெறாத சமயங்களும், பண்பாட்டம்சங்களும் தமிழ் மக்களிடையே புகுந்துகொள்வதையும் காணலாம். சங்ககாலப் பகுதியில் அரசியற் தலைவரிடையே காணப் பட்ட போர் வெறி தமிழ்நாட்டைச் சீர்குலையச் செய்தது. சிலவேளைகளில் ஆண் - பெண் உறவு தொடர்பான கட்டுப்பாடுகள் அற்ற நிலை, சமுதாயச் சீரழிவுகளுக்கு வித்திட்டது. எனவே, அரசியல் நிலையிலும், பண்பாட்டு நிலையிலும் அமைதியை அவாவி நின்ற தமிழ் நாட்டுக்கு அகிம்சைக் கோட்பாட்டை அடிப் படையாகக் கொண்டிருந்த சமணமும், பௌத்தமும் ஆறுதல் அளிக்கும் என்ற எதிர்பார்ப்பு உணர்வு சமுதாயத்தில் ஏற்பட்டது. அத்தோடு, ஆரியர்களின் வைதீக சமயமும், பண்பாட்டு அம்சங்களும் தமிழகத்திற் புகத் தொடங்கின. ஆரியரின் பண்பாடு சமுதாயத்திற் புதிய கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியது. தாலி கட்டும் முறை, வருணாசிரம முறை என்பன அவற்றுட் சிலவாகும். சமணம், பௌத்தம், வைதீக மதம் ஆகியவை சங்ககாலத் தமிழ் நாட்டில் நகரப்பகுதிகளில் ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்து, பின்னர் சங்கமருவிய காலப் பகுதியில் அவை தமிழர் சமுதாயம் முழுவதிலும் பெருஞ் செல்வாக்குப் பெறுவதனைக் காணமுடிகின்றது.

கலாநிதி துரை. மனோகரன்

இவ்வாறு புதிய பண்பாடுகள் தமிழர் சமுதாயத்தோடு சங்கமிக்கத் தொடங்கியமையாலும், சமூக பொருளாதார நிலைகளில் ஏற்படத் தொடங்கிய மாற்றங்களினாலும் நில இயற்கைக்கேற்ற பண்பாட்டு அம்சங்களிலும் மாறுதல்கள் விளையத் தொடங்கின. திட்ட வட்டமான ஐந்நிலப் பாகுபாடு சங்கமருவிய காலத்திலிருந்து சிறிது சிறிதாக மாற்றம் பெற ஆரம்பித்தது.

சமண, பௌத்த சமயங்களின் வருகையைத் தொடர்ந்து, அறக்கோட்பாடுகளும், ஆரியரின் பண்பாட்டம்சங்களும் காரணமாக, அந்தணரின் செல்வாக்கும் தமிழர் சமுதாயத்தில் இடம்பெறத் தொடங்கியது. சமணரும், பௌத்தரும் சமயத் தொண்டுகள் புரிவதற்காகத் தமிழ்நாட்டிற் சங்கங்களை நிறுவ முயன்றனர். அத்தகைய சங்கமே, கி. பி. 470 இல்

வச்சிரநந்தி என்னும் சமணத் துறவியினால் நிறுவப்பட்ட திராவிட சங்கமாகும்.

காலத்திற்கேற்பவே இலக்கியப் பண்புகளும், நூல்களின் தோற்றமும் அமையும் என்பதற்கு எடுத்துக் காட்டாகவே சங்கமருவிய காலம் அமைந்துள்ளது. அறநெறிக் கோட்பாடுகளும், கட்டுப்பாடுகளை வலியுறுத்தும் விதிமுறைகளும் புகத் தொடங்கிய அக்காலகட்டத்தில், அவற்றுக்கு ஏற்புடைய நூல்களே பெருமளவு தோற்றம் பெற்றன. அவ்வகையில், பதினொரு அறநெறி நூல்கள் அக்காலத்தில் தோன்றியுள்ளன. திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி ஆகியவை அத்தகையவையாகும். அவற்றுள், திருக்குறள் தலையாயது. திருக்குறளின் ஆசிரியர் திருவள்ளுவர், அறத்துப்பாலில் தம்மை அறவாதியாகவும், பொருட்பாலில் அரசியல் ஞானியாகவும், காமத்துப்பாலில் இலக்கியவாதியாகவும் இனங்காட்டுகின்றார். திருக்குறளைப் போன்று, அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை நானூறு பாடல்களால் அறிவுறுத்தும் நாலடியார், அறவொழுக்கத்துக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ள அதேவேளையில், இலக்கியச்சுவை கொண்டதாகவும் விளங்குகின்றது. இவை உட்பட, மற்றைய ஒன்பது நூல்களும் சமுதாயத்திற்கும், தனிமனிதருக்கும் அவசியமான வாழ்வியல் விதிகளையும், விலக்குகளையும் விளக்குகின்றன.

சங்கமருவிய காலத்தில் எழுந்த ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கார் நாற்பது, கைந்நிலை ஆகிய ஆறு நூல்களும் அகத்திணை சார்பான நூல்களாகும். களவழி நாற்பது என்ற நூல், புறத்திணை சார்ந்த நூலாகும். அறம், பொருள், இன்பம் ஆகியவற்றைக் கூறும் திருக்குறள், நாலடியார் ஆகியவையும், அறக்கருத்துகளை அழுத்தமாகத் தெரிவிக்கும் பிற ஒன்பது நூல்களும், ஆறு அகத்திணை சார்ந்த நூல்களும், ஒரு புறத்திணை தொடர்பான நூலும் ஆகிய பதினெட்டு நூல்களும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எனப் படுகின்றன. சங்கநூல்களை மேற்கணக்கு நூல்கள் எனவும், சங்கமருவிய காலத்து இப் பதினெட்டு நூல்களையும் கீழ்க்கணக்கு நூல்கள் என்றும் கூறுவது இலக்கிய வழக்காகும். கணக்கு என்பது இலக்கியத்தைக் குறிக்கும். அவ்வகையில் மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என்பன, தர அடிப்படையில் அன்றி, பாடல் அடிகளின் எண்ணிக்கையளவைக் குறிப்பதாகக் கொள்வது பொருத்தமாகலாம். சங்க இலக்கியங்கள் அகவற்பாவிலும், சங்கமருவியகால இலக்கியங்கள் அளவிற் சிறிய வடிவினதாகிய வெண்பாவிலும் அமைந்திருப்பது அதற்கான காரணமாகலாம்.

அறநூல்களின் எழுச்சியை அடுத்து சங்கமருவிய காலத்தின் தனித்துவத்தை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருப்பது, காவியங்களின் தோற்றமாகும். சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகியவை, தமிழிற் காவியத்தின் தோற்றத்துக்கு வித்திட்ட முன்னோடி முயற்சிகளாகும். தமிழ்க் காவிய முன்னோடியான இளங்கோ, தமது காவிய ஆக்கத்திற்குச் சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டு நூல்களின் வடிவத்தை ஆதாரமாகக் கொண்டார் என்று கருத இடமுண்டு. பத்துப்பாட்டு நூல்கள் கதையின்றிப் புறத்திணை விடயங்களையோ, அகத்திணை விடயங்களையோ தொடர் நிலைச் செய்யுள் வடிவில் அகவற்பாவிற் கூறுகின்றன. அத்தகைய வடிவத்தையே தமது காவிய ஆக்க முயற்சிக்கு இளங்கோ அடிப்படையாகக் கொண்டு, கதை பொதிந்த இலக்கியம் ஒன்றைப் படைத்தார் எனக் கருதலாம். அதனைத் தொடர்ந்து, மதுரைக் கூல வாணிகன் சாத்தனார், சிலப்பதிகாரத்தோடு கதைத் தொடர்புடைய மணிமேகலையை இயற்றினார். இரு காவியங்களும் தமது காலத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அறநெறிக் கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளிப்பனவாக விளங்குகின்றன: தமிழ்நாடு பற்றிய தேசிய நோக்கும், கலைகளில் ஈடுபாடும், சமயப் பொறையும், கவித்துவ ஆற்றலும் கொண்ட இளங்கோவின் காவியம், தமிழின் சிறந்த காவியங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. சிறந்த கவித்துவ ஆற்றல் உடையவராயினும், மணிமேகலையாசிரியர், தமது சமயப் பிரசாரத்துக்கு உகந்த ஓர் ஊடகமாகவே காவியத்தை வடித்துள்ளார்.

சங்கமருவிய காலத்தில் தோன்றிய இன்னொரு நூலாகக் கருதப்படுவது, தொல்காப்பியம் ஆகும். இதனைச் சங்ககால நூலெனக் கூறுவதற்குத் தமிழறிஞர் பலர் முயன்றபோதிலும், ஆய்வாளர்கள் அது சங்கமருவிய காலத்தது எனக் கருதுவர். தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, பழந்தமிழ் இலக்கியம் பற்றிய பல விடயங்களை அறிவதற்கு உறுதுணையாகத் தொல்காப்பியம் விளங்குகின்றது.

சங்க இலக்கியங்களிலே சேர்த்துக்கொள் ளப்பட்டுள்ள மூன்று நூல்கள், அவற்றின் பொரு ளமைதி, மொழிநடை, அமைப்பு முதலியவற் றின் அடிப்படையில் சங்கமருவியகால நூல்க ளாகக் கொள்ளப்படுவதுண்டு. கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை என்பன அம் மூன்று நூல்களுமாகும்.

சங்கமருவிய காலம் பிறிதொரு வகையில் பிற்கால இலக்கியங்களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. பல்லவர் காலத்திற் பக்தி இலக்கியம் வளர்ச்சி பெறுவதற்கு வித்திட்ட காலப்பகுதி அக்காலமேயாகும். முதலாழ்வார் களான பொகையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும், காரைக்காலம்மை யாரும் பாடிய பக்திப் பாடல்கள், பல்லவர் காலத்து ஆழ்வாரும், நாயன்மாரும் பக்தியியக் கத்தைக் கட்டியெழுப்ப முன்னோடிகளாக விளங் கின. இவர்களுள் காரைக்காலம்மையார் குறிப் பிடத் தக்கவராக விளங்குகின்றார். பக்திக் கவிதையின் வடிவத்தில் இவர் செய்த மாற்றம், தமிழ் இலக்கிய வரலாற்றினையே திசைதிருப் புவதாக அமைந்தது. ஆரம்பத்திற் காலத்தின் தேவைக்கேற்ப வெண்பா வடிவையே பயன்ப டுத்தித் தமது அற்புதத் திருவந்தாதியைப் பாடிய அம்மையார், காலப்போக்கிற் தமது பக் தியுணர்வைப் புலப்படுத்துவதற்கு வெண்பா யாப்பின் போதாமையை உணர்ந்து, திருவி ரட்டைமணிமாலையில் கட்டளைக் கலித்துறை யையும், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங் களில் விருத்தப்பாவையும் பயன்படுத்தியுள் ளார். இவர் அறிமுகப்படுத்திய விருத்தப்பா, பல்லவர் காலத்துப் பக்திக் கவிஞர்களாலும் பயன்படுத்தப் பட்டுச் சிறப்புப் பெற்றதோடு, சோழர் காலத்திற் காவியம் பாடுவதற்கு ஏற்ற வடிவமாகவும் மாற்றம் பெற்றது.

சங்கமருவிய காலத்தில் அறக்கருத்துகளை எடுத்துக் கூறுவதில் இலக்கியவாதிகள் அதிக அக்கறை கொண்டிருந்தமையினால், கட்டுக் கோப்பான வடிவினதான வெண்பா யாப்பே பெருமளவிற் பயன்படுத்தப் பட்டது. வாழ்க் கைக்குத் தேவையான விதிகளையும், விலக்குக ளையும் எடுத்துரைப்பதற்குப் பொருத்தமான ஊடகமாக அறநெறிக் கவிஞர்கள் வெண்பா வையே கருதினர். அக்காலத்தில் வெண்பா பெற்ற பெருஞ்செல்வாக்குக் காரணமாக, அற நெறி நூல்கள் மாத்திரமன்றி, அகத்திணை, புறத்திணை, சார்ந்த நூல்களும், பக்தி இலக் கியங்களும்கூட வெண்பா யாப்பிலேயே பாடப் பட்டன. காவியங்கள் சங்ககாலத்தில் வழக்கி லிருந்த அகவற்பாவில் இயற்றப்பட்டன.

அக்காலத்தின் தனித்துவ அம்சங்களுள் ஒன்றாக விளங்குவது, உரைநடையின் தோற் றமாகும். சிலப்பதிகாரம் பாட்டும் உரையும் விரவி அமைந்த ஓர் இலக்கியமாக விளங்குவ தால், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என அதனைக் குறிப்பிடுவர். அக்காவியத்தில் இடம்பெறும் சில உரைப் பகுதிகள், தமிழில் உரைநடையின் தோற்றத்துக்குக் கட்டியம் கூறு கின்றன எனலாம்.

சங்கமருவிய காலத்திற் காணப்படும் பிறி தொரு தனித்துவ அம்சம், ஒரு குறிப்பிட்ட விடயத்தைப் பல செய்யுள்களில் அமைத்துப் பாடும் மரபின் தோற்றமாகும். சங்ககாலத்தில் ஒரு குறிப்பிட்ட துறை, ஒரு செய்யுளிலே பாடப் பட, சங்கமருவிய காலத்திலிருந்து ஒரு துறை தொடர்பான பல செய்யுள்கள் இயற்றப்படும் வழக்குத் தோன்றியது. இதற்கு, அக்காலப் பகுதியில் தோன்றிய அகத்திணை நூல்கள் போதிய சான்றுகளாக விளங்குகின்றன.

இவ்வாறு பல வகையில் நோக்கும்போதும், சங்கமருவியகால இலக்கியம், பல தனித்துவக் கூறுகளைக் கொண்டு வளர்ந்து வந்துள்ளமை யைக் காணமுடிகிறது. காலத்திற்கேற்ற வகை யிலேயே இலக்கிய வரலாற்றின் செல்நெறி அமையும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக அக்கால இலக்கியங்கள் விளங்குகின்றன. அதே வேளை, தமிழின் பெருமையை உலகுக்குப் பறை சாற்றும் திருக்குறள், சிலப்பதிகாரம், தொல்காப்பியம் போன்ற சிறந்த நூல்கள் எழுந்த காலகட்டமாகவும் சங்கமருவிய காலம் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஈழத்தில் நாற்பது ஆண்டுகள் ஆட்சிசெய்த தமிழரசன் மாகோன்

1. முன்னுரை:

இலங்கை வரலாற்றில் மிக நீண்ட காலம் ஆட்சிசெய்த ஒரு மன்னன் கலிங்கமாகன் என்னும் தமிழ் மன்னன். இவன் மிகுந்த படைபலம் கொண்டு சக்கரவர்த்தி என்ற பெருமையோடும் திரிபுவனச்சக்கரவர்த்தி என்ற விருதோடும் பெரும் புகழ் பெற்றிருந்தான். அதனால் எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனமாக அவன் விளங்கினான்.

பொலன்னறுவை இவன் தலை நகராக இருந்தபோதும், வடக்கே யாழ்ப்பாணம் முதல் தெற்கே திருக்கோயில் வரை தற்போதைய வடக்கு-கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கியதாக அவன் ஆட்சிப்பரப்பு விரிந்து பரந்திருந்தது. வடக்கு-கிழக்கு கரையோரங்களில் இவன் படைகள் நிலைபெற்றிருந்ததால் எதிரிகள் இவனுடைய ராஜ்யத்துக்குள் ஊடுருவமுடியாதபடி எல்லைப் பாதுகாப்பு பலம் பெற்றிருந்தது.

இவனுடைய ஆட்சிக்காலம் பற்றி பௌத்த வரலாற்று நூல்கள் பின்வருமாறு பதிவு செய்துள்ளன.

(I) சூளவம்சம் - இவனுடைய ஆட்சிக் காலம் 21 வருடங்கள் எனக் குறிப்பிடுகின்றது. 1 (கி.பி. 1215-1236)

(II) பூஜாவலிய - இவனுடைய ஆட்சிக் காலம் 40 வருடங்கள் எனக் குறிப்பிடுகின்றது. 2 (கி.பி. 1215-1255)

(III) ஆய்வாளர் வியனகமகே - இவனுடைய ஆட்சிக் காலம் 44 வருடங்கள் எனக்குறிப்பிடுகிறார். 3 (கி.பி. 1215-1259)

21, 40, 44 ஆண்டுகள் என்பது ஒரு மன்னனின் ஆட்சிக் காலத்தில் மிக நீண்ட காலமாகும். இத்தகைய நீண்ட ஆட்சிக் காலத்தைக் கொண்ட மாகோனின் வரலாற்றுத் தகவல்கள் மிகக் குறைந்த அளவிலேதான், சிங்கள, பௌத்த வரலாற்று நூல்களில் காணப்படுகின்றன. அது மட்டுமல்ல, இந்த நூல்களில் இவன் மிகக் கொடூரமானவனாகவே சித்தரிக்கப்படுகிறான்.

இந்த நூல்களில் இடம்பெறும் தகவல்களைத் துருவி ஆராயும்போது, அவற்றினூடே மாகோனின் சிறப்புகள் ஓரளவு புலப்படுகின்றன. அகச் சான்றுகள் புறச்சான்றுகள் மூலம் இவை மேலும் உறுதியாகின்றன.

---

செல்வி. க. தங்கேஸ்வரி B. A. தொல் சிறப்பு
(கலாசார உத்தியோகத்தர், மட்டக்களப்பு)

---

2. உண்மைக்கு மாறான தகவல்கள்:

பௌத்த வரலாற்று நூல்கள் மாகோனைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றன. இவை ராஜவலிய, பூஜாவலிய ஆகியவற்றின் குறிப்புக்கள்.

மாகோன் பெரும் படையுடன் கலிங்கத்திலிருந்து இலங்கைக்கு வந்து, நகரத்தைச் சூறையாடினான். விகாரைகளை இடித்துத் தரைமட்டமாக்கினான். பௌத்த பிக்குகளைத் துன்புறுத்தினான். பௌத்தப் பள்ளிகளை அழித்து அவற்றைப் படைத்தளங்களாக மாற்றினான். ஒவ்வொரு கிராமத்திலும் தமிழர்களைக் குடியமர்த்தினான். செல்வந்தர்களிடமிருந்த செல்வங்களையெல்லாம் கொள்ளையடித்து, தனது படைவீரர்களுக்குக் கொடுத்தான். 4

இவ்வாறு மாகோன் ஒரு கொடுங்கோலன் என்பதுபோல் இந்த வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன.

ஆனால் பின்னால் வந்த ஆய்வாளர்கள் - டாக்டர் எஸ். பரணவிதான, வியனகமகே போன்றவர்கள் மேற்படி கூற்றுக்களை ஏற்றுக் கொள்ளவில்லை. உண்மையில் அவன் ஒரு

கொடுங்கோலனாக இருந்தால், நீண்டகாலம் ஆட்சியில் இருந்திருக்க முடியாது.

உண்மை என்ன வென்றால் இலங்கையிலிருந்த சோழவம்சத்தைச் சேர்ந்த சிலர், சிங்களவருடன் சேர்ந்து கொண்டு, கலிங்க வம்சத்தை சேர்ந்த மக்களை துன்புறுத்தி வந்தனர். அவர்களை இத்துன்புறுத்தல்களில் இருந்து விடுவிக்கும் முகமாகவே மாகோன் பெரும் படையுடன் (24,000 போர்வீரர்கள் கொண்டபடை) கலிங்கத்திலிருந்து புறப்பட்டு இலங்கைக்கு வந்தான்.

இந்தப் போராட்டத்தில் சில அழிவுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் போராட்டத்தின் பின் மாகோன் பாதுகாப்பான ஓர் ஆட்சியை நிறுவி 40, 44 ஆண்டுகளாக மக்களுக்குச் செய்த பணிகள் பௌத்த வரலாற்று நூல்களில் பதிவாகவில்லை.

### 3. ஆய்வாளர்களின் பணி

மாகோனது வரலாறு பற்றிப் பிரபல ஆய்வாளர்களான டாக்டர் எஸ். பரணவிதான, கலாநிதி லியனகமகே, கலாநிதி இந்திரபாலா, கலாநிதி பத்மநாதன், கலாநிதி சி.க. சிற்றம்பலம் முதலியோர் விரிவான ஆய்வுகளைச் செய்து, பௌத்த வரலாற்று நூல்களில் இடம்பெறாத பல புதிய தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இவர்களது ஆய்வுகள், மறைந்து கிடந்த மாகோனை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தன. இந்த ஆய்வுகள்தான் மாகோனைப்பற்றி மேலும் ஆய்வதற்கான வாசல்களைத் திறந்து விட்டன எனலாம். அந்த வாசல் வழியே செல்லும்போது மகோன்பற்றிய தரிசனம் விரிவடைவதைக் காண முடிகிறது.

மாகோனின் பரந்துபட்ட பணிகள், அவற்றை நிறை வேற்றுவதற்கான, அமைதியான ஆட்சிக்குச் சான்று பகர்கின்றன. அந்தப் பின்னணியில் பார்க்கும்போது மாகோன் ஒரு மகானாகத் தோற்றுகிறான். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வளித்தவனாக அந்த மக்களுடைய அபிலாஷைகளை நிறைவேற்றியவனாக அவன் காட்சியளிக்கிறான். அவனுடைய பணிகள் பின்வருமாறு அமைகின்றன.

(I) முறையான ஆட்சி அமைப்பு
(II) அதற்குத் துணையாக அமைந்த உபராஜர்கள்
(III) நெல்விளைச்சல், நீர்ப்பாசனம்
(IV) கோயில் திருப்பணிகள்
(V) கோயிலுக்கான நிவந்தங்கள்
(VI) கட்டுக்கோப்பான படைகள்
(VII) நிர்வாகப் பரவலாக்கல்
(VIII) கிராமப்புற வாழ்க்கை வளம்
(IX) சமதர்ம நோக்கு
(X) மக்கள் நலன் பேணல்
(XI) போர்த் தந்திரம்
(XII) போரிலும் தர்மம்
(XIII) வன்னிமை வகுத்தல்

### 4. நீண்டகால ஆட்சி

மாகோனுடைய ஆட்சிச்சிறப்புக்கு அவனுடைய நீண்டகால ஆட்சியே தக்க சான்றாகின்றது எனக் கூறினோம். இது ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு கருத்து. மக்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் ஒரு மன்னனுடைய ஆட்சி நிலைக்கவோ, நீடிக்கவோ முடியாது என்பது வரலாறு. கட்டுக்கோப்பான நிர்வாகமும், படைபலமும் இல்லாவிட்டால் பரந்துபட்ட ஒரு இராசதானியை நீண்ட காலம் ஆட்சி செய்ய முடியாது என்பதும் வரலாறு. ஒரு கொடுங்கோலனால் சர்வாதிகாரியால் இந்த இரண்டு சாதனைகளையும் நிலைநாட்டமுடியாது.

பொலன்னறுவையைத் தலைநகராக்கொண்டு, வட இலங்கை முதல் தென்னிலங்கை வரை மாகோன் ஆட்சி செய்த இந்த நீண்ட காலப் பகுதியில், சிங்கள மன்னர்கள் தமது ராசதானியை தம்பதேனியாவில் அமைத்துக் கொண்டு ஆட்சி செய்தனர். மாகோனை எதிர்ப்பதற்காக இவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தன என்பதை ''தம்பதேனிய வம்சம்'' என்ற கட்டுரையில் டாக்டர் எஸ். பரணவிதான குறிப்பிட்டிருக்கிறார். 5

மாகோனின் படைபலமும், படைப்பயிற்சியும் கூட அவனது நீண்டகால ஆட்சிக்கு உறுதுணையாக அமைந்தன எனலாம். இவனுடைய படைகள் வடக்கே ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், இலுப்பைக் கடவை முதலிய இடங்களிலும், கிழக்கே, கொட்டியாரம், திருக்கோணமலை, கந்தளாய் முதலிய இடங்களிலும், மேற்கே பெரியகுளம், மன்னார், மாந்தை முதலிய இடங்களிலும், மத்தியில் பொலன்னறுவை, பதவியா, கொலன்நுவர

(கொழும்பு) முதலிய இடங்களிலும் நிலை பெற்றிருந்தன, உறுகுணை ராஜ்ஜியத்தைக் கைப்பற்றி மகாகம (திசமாறாமை) என்ற இடத்தைப் பலப்படுத்தினான். 6 அதன்பின் யாழ்ப்பாணத்தைப் பலப்படுத்தினான். இவ்வாறு நாட்டின் எல்லாப்பகுதிகளும் அவன் கட்டுப்பாட்டில் இருந்தன.

5. உபராஜர்கள்:

மாகோனுக்குத் துணையாகப் பல உபராஜர்கள் அவனுடைய நிலையான ஆட்சிக்குப் பக்கபலமாக நின்று உதவியுள்ளனர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவன், புகழ் பெற்ற சோடகங்க தேவ என வரலாற்றில் புகழ் பெற்ற சோழ கங்கன் ஆவான். இவனே திருக்கோணேஸ்வரத்தில் திருப்பணி செய்த குளக்கோட்டன். 7

மாகோனும், குளக்கோட்டனும் இணைந்து மேற்கொண்ட பல நற்பணிகள் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. (மேலும் விபரங்களை எனது ''குளக்கோட்டன் தரிசனம்'' நூலில் காணலாம்) 8

இவர்கள் இருவரும் இந்தியாவிலிருந்து வன்னியரை பெருந்தொகையாகக் கொண்டு வந்து இலங்கையில் குடியேற்றினர். 9 அவர்கள் மூலம் பல நற்பணிகளை மேற்கொண்டனர். இது பற்றி கலாநிதி பத்மநாதன் தனது ''வன்னியர்'' என்னும் நூலில் விபரமாகக் கூறியுள்ளார். இவர் ''சூளவம்சத்'' தை ஆதாரமாகக் கொண்டு மாகோனுடன் வந்த உபராஜனே குளக்கோட்டன் என்ற கருத்தையும் தெரிவித்துள்ளார்.

மாகோனுக்கும், குளக்கோட்டனுக்கும் முறையே விஜயபாகு, ஜயபாகு என்ற பெயர்களுமுண்டு, இவர்கள் சிங்கள பௌத்தமக்களுக்கு எதிராகச் செயற்பட்டிருந்தால் இப்பெயர்களைச் சூட்டிக்கொண்டிருக்க மாட்டார்கள்.

மாகோனும் ஜயபாகுவும் பொலன்னறுவையில் தொடர்ந்து ஆட்சிசெய்தனர். 'எழு அத்தனகளுவம்ச'' என்னும் நூல் பொலன்னறுவையில் இருந்த மாகோன் படைகள் பற்றிக் குறிப்பிடும் போது அவை நூறாயிரக்கணக்கான சோழபாண்டிய வீரர்களைக் கொண்டிருந்தன என்றும், அவர்களுக்கு அரசனும், உபராஜனும் இருந்தனர் எனக்குறிப்பிடுகின்றது. எனவே மாகோனின் படைகள், கட்டுக்கோப்பாக அமைந்திருந்தன என்பது பெறப்படுகின்றது. இதே நூலில் மாகோனின் பெயர் விஜயபாகு எனவும் குறிப்பிடப்படுகிறது. மாகோனின் உபராஜர்களே, மாகோனின் பிரதிநிதிகளாக, தூரப் பிரதேசங்களில் நிர்வாகம் சீர்குலையாமல் கண்காணித்து வந்தனர் எனலாம்.

6. மாகனும் ராஜரட்டையும்:

இலங்கையின் அந்தக்கால மூன்று பிரிவுகளுள் ஒன்றான ராஜரட்டை மாகோனது ஆட்சியில் இருந்ததாக ''சூளவம்சம்'' மூலம் அறிய முடிகிறது. புலத்திநகர் என்ற பொலன்னறுவையைத் தலை நகராகக் கொண்டு, ராஜரட்டை முழுவதையும் மாகன் ஆட்சி செய்தான் என இந்நூல் கூறுகிறது.

ஏற்கனவே, மாகன் உறுகுணைரட்டையைக் கைப்பற்றி ஆட்சி செய்தான் என்பதை முன்னர் பார்த்தோம். ஆகவே இலங்கையின் மூன்றில் இரண்டு பகுதி இவன் ஆட்சியில் இருந்தது என்பது பெறப்படுகின்றது.

புலத்தியுர, புலத்திநகரம், தோப்பாவை என்பதெல்லாம் பொலன்னறுவையைக் குறிக்கும் பெயர்கள். ராஜரட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த குருண்டி (Kurundi) குத்தன்குளம் மனாமத்த (Manamatha) மாந்தை (Mantai) புலச்சேரி முதலிய இடங்களிலும் மற்றும் கொட்டியாரம் (Kothsara) திருகோணமலை (Gonaratta) கந்தளாய் (Gaugtalawa) கட்டுக்குளம் (Kattukulam) பதவியா (Padiratta) முதலிய இடங்களில் மாகோனின் படைகள் இருந்தன என்பதை டாக்டர் பரணவிதான குறிப்பிட்டுள்ளார். 10

கொத்மலை, பெலிகலை, தம்பதேனியா, வத்தளை, களனி, அத்தனகலை ஆகிய இடங்களிலும் மாகனது ஆட்சி பரவி இருந்தது. என்பதை விஜயபாகு (IV) ஆட்சிக்காலக் குறிப்பின் மூலம் அறிய முடிகின்றது. பொலன்னறுவையிலிருந்து திருடப்பட்டு கொத்மலையில் ஒளித்து வைத்திருந்த புத்த தந்தத்தையும். பிட்சா பாத்திரத்தையும் விஜயபாகு (IV) மீட்டு, பெலிகலையில் புத்த தந்தத்துக்கு கோயில் அமைத்தான் எனவும், அத்தோடு, தம்பதேனிய, பெலிகலை, வத்தளை, களனி, அத்தனகல, தொட்டகமு ஆகிய இடங்களில் ஆலயங்களை அமைத்தான் எனவும் அக்குறிப்பு கூறுகின்றது.

நமக்கு இப்போது கிடைக்கக் கூடிய சொற்ப தகவல்களிலிருந்தே, மாகோனுடைய பரந்த

நோக்கையும், பெருந்தன்மையையும் சமய சமூகப்பணிகளையும், ஆலயத்திருப்பணிகளையும், ஆட்சிமுறையையும் ஓரளவு அறிய முடிகிறது. இவைகளைக் கொண்டு பார்க்கும்போது மாகோனை ஒரு கொடுங்கோலனாக, அட்டூழியங்கள் செய்தவனாக அராஜகம் புரிந்தவனாக எண்ணிப்பார்க்க முடியவில்லை. அப்படியானால் இலங்கை வரலாறு ஏன் மாகோனை அப்படிச் சித்திரிக்க வேண்டும்.

7. மாசுபட்ட வரலாறு:

பௌத்த வரலாற்று நூல்களில் மாகோன் வரலாறு திரித்துக் கூறப்பட்டமைக்குரிய காரணங்களை நாம் ஒருவாறு ஊகிக்கலாம்.

பெரும் படையுடன் மாகோன் கலிங்கத்திலிருந்து இலங்கைக்கு வந்த நோக்கத்தை நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இலங்கையில் சோழவம்சத்தவரும் சிங்களவரும் சேர்ந்து கலிங்கவம்சத்து மக்களைத் துன்புறுத்தினர். அவர்களை இத்துன்பத்திலிருந்து விடுவிப்பதே மாகோனின் முக்கிய நோக்கமாக இருந்தது.

இந்தப் போராட்டத்தின் போது மகோன் சிங்கள பௌத்தர்களுக்கு எதிராகச் செயற்பட வேண்டியிருந்தது. இந்தக் கலவரத்தில், பௌத்த பிக்குகளும், பௌத்த வணக்கத்தலங்களும் கூடப் பாதிக்கப்பட்டிருக்கலாம். இதனால் பௌத்தர்கள் மாகோனை தமது எதிரியாகவே கருதியிருக்க வேண்டும் எனவே பௌத்தர்களால் எழுதப்பட்ட வரலாற்று நூலில் மாகோனின் நல்ல பணிகள் மறைக்கப்பட்டு, அவனுடைய ஆரம்ப கால நடவடிக்கைகள் சற்று மிகையாகவே பதிவாகியுள்ளதில் ஆச்சரியம் இல்லை.

மேலும், பொலன்னறுவையில் நீண்டகாலம் நிலைத்திருந்த சிங்கள மன்னர்களின் ஆட்சியைக் கவிழ்த்து அவர்களைத் தம்பதேனியாவுக்கு இடம் பெயரச் செய்தமையும் பௌத்த வரலாற்றசிரியர்களுக்கு மாகோன் மீது குரோத்தை வளர்த்திருக்கலாம்.

அதுமட்டமல்ல, நாற்பது வருடங்களுக்கு மேலாக ராஜரட்டை உறுகுணைரட்டை பிரதேசங்களை உள்ளடக்கிய பெரும் நிலப்பரப்புக்கு அதிபதியாகி, சிங்கள மன்னர்கள் எவராலும் எதிர்க்க முடியாத அளவு வலிமை பெற்றிருந்த ஒரு தமிழ் மன்னனாக அவன் விளங்கியதும், பௌத்த வரலாற்றசிரியர்களுக்கு ஆத்திரமூட்டியிருக்கலாம்.

இன்னோரன்ன காரணங்களால், இலங்கை வரலாற்று ஏடுகளில் மாகோன் வரலாற்று மாசுபடுத்தபட்டிருந்த போதும், ஏராளமான அகச்சான்றுகள், புறச்சான்றுகள் மூலம் அந்த மாசு துடைக்கப்பட்டிருப்பதை இன்று நாம் பார்க்கிறோம்.

8. மாகோன் வரலாறு கூறும் நூல்கள்:

40 அல்லது 44 வருடங்கள் ஆட்சிசெய்த ஒரு மன்னனின் வரலாற்றுச் சுவடுகளை யார் தான் மறைக்க முடியும்? அப்படியான வரலாற்றுச் சுவடுக்களை எடுத்துக் காட்டும் நூல்களில், பின்வருபவை முக்கியமானவை

(அ) சூளவம்சம் - கைகர் (Geiger) மொழி - பெயர்ப்பு

(ஆ) பூஜாவலிய - A. V. சுரவிர பதிப்பு

(இ) நிகாய சங்கிரகய - D. M. de Z. விக்கிரமசிங்க பதிப்பு

(ஈ) மட்டக்களப்பு மான்மியம் - F. X. C. நடராசா பதிப்பு

(உ) திருக்கோயில் கல்வெட்டுகள் - Dr. ஆ. வேலுப்பிள்ளை

(ஊ) ராஜாவலிய - B. குணசேகரா பதிப்பு

(எ) யாழ்ப்பாண வைபவமாலை - மயில்வாகனப் புலவர்

(ஏ) வையாபாடல் - வையாபுரி ஐயர் (க. செ. நடராசா பதிப்பு)

(ஐ) வம்சத்தீரிகாசினி - G. P. மலலசேகரா பதிப்பு

(ஒ) கைலாய மாலை - முத்துக்கவிராசர்

(ஓ) எழுஹத்தனகல விக்ாரவம்ச - G. E. கொடக்கம்புர

இவைதவிர அண்மைக் காலம் வரை பல பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் எழுதிய பின்வரும் நூல்களிலும் மாகோன் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

(அ) யாழ்ப்பாண வைபவ விமர்சனம் - சுவாமி ஞானப்பிரகாசர்

(ஆ) History of Ceylon - Dr. S. Paranavithana

(இ) Ceylon and Malaysia - Dr. S. Paranavithana

(ஈ) Ancient Jaffna
- Mudaliyar Rasanayagam

(உ) The Kingdom of Jaffna
- Dr. S. Pathamanathan

(ஊ) வன்னியர் - கலாநிதி எஸ். பத்மநாதன்

(எ) The Decline of Polonnaruwa and the Rise of Dambadeniya
- Dr. S. Liyanagamage

(ஏ) குளக்கோட்டன் தரிசனம்
- க. தங்கேஸ்வரி

(ஐ) இலங்கைச் சரித்திர சூசனம்
- ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

(ஒ) Dambadeniya Dynasty
- Dr. S. Liyanagamage

(ஓ) The Tamils in Early Ceylon
- C. Sivaratnam

(ஔ) South Indian Inscriptions -

## அடிக்குறிப்புகள்

1. சூளவவசம், கெய்கர் மொழி பெயர்ப்பு, அத் LXXIX - பக்: 132 - 134
2. History of Ceylon. Vol. II Dr. S. Paranavitharana, பக்: 619 - 623
3. The Decline of Polonnaruwa the Rise of Dambadeniya, By Liyanagamage 1960 - Chap. II
4. சூளவம்சம் (கெய்கர்) - அத் LXXIX - பக் 132
5. History of Ceylon Vol. II - By Dr. S. Paranavitharana.
6. ராஜாவலிய - B. Gunasekera பதிப்பு
7. Epigraphic Zeylonica - Vol. IV. பக்: 110 - 177
8. குளக்கோட்டன் தரிசனம் - க. தங்கேஸ்வரி பக்: 61
9. மட்டக்களப்பு மான்மியம் - F. X. C நடராசா பதிப்பு 1952 - பக்: 95 - 98
10. History of Ceylon - Vol. II. Dr. S. Paranavitharana - பக்: 619 - 622

# தமிழர் கலை இலக்கியங்களில் இசையின் பங்கு

பழந்தமிழ் மக்களுடைய வாழ்க்கையில் இசை எந்தளவிற்கு முக்கியத்துவம் உடையதாக விருந்ததென்பதை ஈண்டு நோக்குவோம். ஒன்று அவர்கள் கைக்கொண்ட கலைகளில் இசை இடம்பெற்றது. மற்றது தமிழ் மக்கள் இயற்றிய இலக்கியங்களில் இசை முக்கிய இடம் வகித்தது. இசை என்னும் சொல்லிற்கு இசைவிப்பது, வசப்படுத்துவது எனப்பொருள் கொள்ளலாம். மரம், செடி, கொடி முதலிய ஓரறிவு உயிர்கள் முதலாக மக்கள் என்னும் ஆறறிவு உயிர்கள் ஈறாக எல்லா உயிர்களையும் இசை வசப்படுத்தும். வரிவண்டுகளின் இசையினால் புதர்களிலுள்ள பூங்கொத்துக்கள் கட்டு நெகிழ்ந்து மலரும் என்னும் செய்தியினை குறுந்தொகைப் பாடலடிகள் உணர்த்துகின்றன.

''புதலும் வரிவண்டூத வாய்நெகிழ்ந்தனவே''

- குறுந்.

இன்னுமொரு அகநானூற்றுப் பாடல் குறிஞ்சிப்பண்ணை பெண்ணொருத்தி பாடக் கேட்டு யானை தினைக்கதிரையும் உண்ணாது நின்ற நிலையில் இருந்து அசையாது, தூக்கம் வராத கண்கள் தூக்கம் வரவிசைந்து நித்திரை செய்யும் என்று கூறுகிறது.

''ஒலியல் வான் மயில் உளரினை கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சிபாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படா அப் பைங்கண் பாடு பெற்றெய்யென
மறம் புகல் மழகளிறுறங்கும்''

- அகம். - க0உ

சங்க காலத்தில் இசைவாணரை அரசர் முதலியோர் நன்கு ஆதரித்தனர். பாணர் பொன்னாலான தாமரைப்பூவையும் விரலியர் பொற்கலன்களையும் பெற்றுச் சிறப்புடன் விளங்கினர். சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றில் வரும் ஒரு பாடல் பாரி மன்னன் பாடல் வல்லவராய் அல்லது ஆடல் வல்லவராய் சென்றால் பிறப்பு மலை நாடான தன்னுடைய தேசத்தையும் பரிசாகக் கொடுப்பான் எனக் கூறுகிறது.

''ஆடினீர் பாடினீர் செலினே
நாடுங் குன்றுமொருங்கீயும்மே''

- புறம்.

சங்க காலத்தில் பாணர், பொருநர், கூத்தர், வயிரியர், கோடியர், விறலியர் எனப் பலவகை இசைவாணர்கள் இருந்தனரென்பதை இலக்கியங்கள் மூலம் அறிய முடிகின்றது. பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) ஆகிய நூல்கள் இவர்களது சிறப்புக்களையே எடுத்துக் கூறுகின்றன. பெரும்பாணனை ஆற்றுப்படுத்தியமையை (வழிப்படுத்தல்) பெரும்பாணாற்றுப் படையும், சிறிய பாணனை வழிப்படுத்தியமையை சிறுபாணாற்றுப் படையும் கூறுகின்றன. ஆடல் புரிபவர் கூத்தர் என அழைக்கப்பட்டனர். பத்துப் பாட்டில் ஒன்றாகிய கூத்தராற்றுப் படை கூத்தன் ஒருவனை நன்னன்சேய் நன்னன் எனும் மன்னனிடம் ஆற்றுப்படுத்தியதாகப் பாடப்பட்டது. வயிரியர் எனப்படுவோரும் ஒருவகை ஆடல்புரிவோரே. இவர்கள் பண் அமைந்த நரம்பினையுடைய தோலாற் போர்க்கப்பட்ட யாழையும் மார்ச்சனை நிறைந்த மத்தாத்தினையுமுடையவர்கள் எனப் புறநானூற்றுப் பாடலடிகள் குறிக்கின்றன.

''பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணமை முழவின் வயிரியர்''

- புறநா.

## எஸ். எதிர்மன்னசிங்கம்

இனிப்பழந்தமிழ் மக்கள் இசையும், ஆடலையும் விரும்பினர் என்பதற்கு அவர்கள் உபயோகித்த இசைக்கருவிகள் சான்று பகருகின்றன. யாழ், பறை, முரசம், முழவு, பதலை, தொண்டகம், ஆகுளி, நட்டை, எல்லரி, தடாரி, குழல், வயிர், பாண்டில், சங்கு ஆகியவை பற்றிய குறிப்புக்கள் சங்ககால நூல்களில் பரவலாகக் காணப்படுகின்றன. பாணர்கள் கொண்டு திரியும் யாழ் பற்றியே அதிக விபரங்கள் எமக்குக் கிடைக்கின்றன.

''புழற் கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில் யாழ்''
- பெரும்பாண். 189 - 182

யாழ் பற்றிய ஒவ்வொரு நுணுக்கங்களையும் அறிந்து புலவர்கள் பாடியுள்ளனர். சுவாமி விபுலானந்தர் யாழ் நூலை இயற்றுவதற்கு இவை பெரிதும் உதவியிருக்க வேண்டுமெனக் கொள்ளக்கிடக்கின்றது. முழவு என்னும் வாத்தியக்கருவி உருவத்தில் பலாப்பழம்போல் இருக்குமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

''கலையுணக் கிழிந்த முழவு மருள் பெரும்பழம்'
- புறநா.

சங்க காலத்தில் நான்கு வகையான பண் இருந்ததெனக் கூறப்படுகின்றது. மருதம், செல்வழி, பாலை, குறிஞ்சி என்பனவே அவையாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நிலங்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது போன்று பண்களும் அமைந்தன. மருதம், மருத நிலத்திற்கும், செல்வழி நெய்தல், முல்லை நிலங்களுக்கும், பாலை, பாலை நிலத்திற்கும், குறிஞ்சி, குறிஞ்சி நிலத்திற்கும் இசைக்கப்படும் பண்களாக கொள்ளப்பட்டன. இசையும் நடனமும் மக்கள் வாழ்க்கையில் முக்கிய இடம்பெற்றிருந்தன. நடனத்தைக் குறிப்பதற்குப் பெரும்பாலும் 'கூத்து' ஆடல் என்ற சொற்களையே வழங்கினர். மக்கள் வாழ்க்கையின் எல்லாத்துறைகளினதும், ஆடல் விரவியிருந்தது. சமயச்சடங்குகளில் ஆடல் தனியிடம் பெற்றது.

சங்க காலத்தைத் தொடர்ந்து வந்த காப்பினர் ஆட்சிகாலத்தில் இயற்றப்பட்டதாகக் கொள்ளப்படும் பெருங்காப்பியமான சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் இசையின் முக்கியத்துவத்தினையும் சிறப்பினையும் நாம் காணலாம். மாதவியின் ஆடற்சிறப்பைப் பற்றி இளங்கோவடிகள் மிகச் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார். ஆடல் ஆசான், இசையோன், குழலோன், யாழ்ப்புலமையோன் பற்றியும் அருந்தொழில் அரங்கம் பற்றியும் மிக அழகாக எடுத்துக்கூறுகிறார். இசையின் முழக்கத்தைப்பற்றிக் கூற வந்த அடிகளார்.

''திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோல் - அது ஓச்சி
கங்கை - தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய், வாழி காவேரி

இவ்வடிகளை மாதவி யாழினை இசைத்துப் பாடியதாக ஆசிரியர் குறிப்பிட்டுச் சொல்கிறார்.

அடுத்து நாயன்மார்களும், ஆழ்வார்களும் வாழ்ந்த காலப்பகுதியில் பாடப்பட்ட சகல தேவார திருவாசகங்களும், திருப்பாசுரங்களும் பண்ணோடு இசைத்துப் பாடக்கூடிய தன்மையில் அமைந்துள்ளன. தேவாரப் பாடல்களில் நாட்டுப்பாடற்தன்மையில் அமைந்த திருப்பொன்னூஞ்சல், திருச்சாழல், தாண்டகம் போன்ற பதிகங்களும் இடம்பெற்றுள்ளன. மகாகவி பாரதியாருடைய கவிதைகளிலும் அனேகமானவை நாட்டுப்பாடல் (சிந்து) மெட்டில் அமைந்தவை; ஏராளமான கவிதைகள் இசை அமைக்கப்பட்டு சினிமாப் படங்களில் இடம் பெற்றுள்ளன. 'மங்கியதோர் நிலவினிலே' என்ற பாரதியின் கவிதை பல மெட்டுக்களில் பாடப்பட்டுள்ளது.

இனி தமிழ் மக்களுடைய கலைகளில் எவ்வாறு இசை முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை நோக்கலாம். சங்க காலத்தில் மக்கள் கைக்கொண்ட ஆடல் வகைகளுள், வள்ளிக் கூத்து, குரவைக்கூத்து, துணங்கைக்கூத்து என்பன சிறப்பிடம் பெறுவன.

''வாங்கமைப்பழுனிய நறவுண்டு
வேங்கை முன்றிற்குரவையுங் கண்டே''
புறநா:

இக்குரவைக்கூத்து நெய்தல் நில மக்களுடைய பொழுதுபோக்காகவும் இருந்தது: மலைபடுகடாம், மதுரைக் காஞ்சி, ஐங்குறுநூறு, பெரும்பாணாற்றுப்படை ஆகிய நூல்களில் இவ்வகைக்கூத்துக்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இப்பாடல்களில் எல்லாம் இசை முக்கிய பங்கினைப் பெற்றது:

தமிழ் மக்களுடைய பாரம்பரியக் கலைகளான நாட்டுக்கூத்து, வசந்தன் ஆடல், கொம்பு விளையாட்டு குரவை, கும்மி, கரகம், காவடி ஆகியனவற்றிலெல்லாம் இசைப்பாடல்கள் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புள்ள கொம்பு விளையாட்டு மிகவும் சிறப்புள்ள பாடல்களுடன் இடம் பெறுகின்றன.

''வடசேரியான் கொம்பு எங்கே எங்கே
வண்ணாடை சாடிக்குள்ளே உள்ளே
தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே
செம்பரத்தேரின் மேலே மேலே''

என இசையோடி இனிமையாகப் பாடி ஆடப்படும். இதேபோன்றுதான் வடமோடி, தென்மோடி ஆகிய இருவகை நாட்டுக்கூத்துக் களிலும் மிகவும் சுவையான இனிமையுள்ள பாடல்கள் இடம்பெறுகின்றன. பாரம்பரிய கலைகளுள் ஒன்றான வசந்தன் ஆடலில் மிகவும் இனிமையான பாடல்கள் உள்ளன. அறுபத்திநான்கு வகையான வசந்தன் பாடல்கள் வசந்தன் கலித்திரட்டில் இடம் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக பிள்ளையார் வசந்தனில் இருந்தது.

'திந்தன தினை தினதின தினை தினதின திளைத் தினனானா'
திக்குட தருகிட கணபதி சரணம்
சிரிய யானைக்கன்றே சரணம்
கைக்கருமேனியன் மருகா சரணம்
வாரண மதமுள்ள கணபதி சரணம்
அரிதரு மருகா கணபதி சரணம்
ஆறனி வேணியன்றாளே சரணம்

எனச் செல்கின்றது. இவ்விதம் காவடிப் பாடல்கள், கும்மிப்பாடல்கள், கரகப்பாடல்கள், எண்ணெய்சிந்துப் பாடல்கள், குளுத்திப்பாடல்கள் எல்லாவற்றிலும் இசையின் பங்கு பிரதானமாகவுள்ளது. தமிழர் தம் கலைகளையும், இலக்கியத்தினையும், வாழ்க்கையினையும் மேம்படுத்தும் கருவியாக இசை விளங்கியதெனலாம். இசைக்கு மயங்காதவர் எவரும் இல்லையெனலாம். இசையானது கல்லையும் உருகவைக்கு மென்பர். இராவணனது வீணாகான இசை மழையிலே இறைவனே மயங்கினான் என்றால் அதனது சிறப்பினைக் கூறவும் வேண்டுமா? இப்பேர்ப்பட்ட இசை தமிழ் இலக்கியங்களிலே ஊற்றெடுத்துப் பிரவாகிப்பதனை நாம் காண முடிகின்றது.

# தமிழ்த் தாய் வணக்கம்

நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த
திரவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ
லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெருந் தமிழணங்கே.

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன்
இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குக்
கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போ லுலகவழக்
கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே.

- மனோன்மணீயம்.

# நோக்கும், போக்கும்!

எனது நோக்கில் வள்ளுவரின் போக்கை முடிந்தவரை ஆய்வதே இக்கட்டுரைச்சுருக்கமாகும். திரு என்றால் சிறந்த-அழகிய-மேலான-உயர்ந்த எனப்பல பொருள்படும். குறள் என்றால் குறுகிய (சிறு) வடிவமுடையது என்பதுபொருள். அதாவது ஐந்து வகை வெண்பாவிலும் சிறிய குறள் வெண்பாவாலானதாலும் குறள் எனப் பட்டதாகலாம்? இதை எழுதியவரின் இயற் பெயர் தெரியவில்லை. வள்ளுவர் என்கிறார்கள். வள்ளுவர் சேரியில் வளர்ந்ததாலோ தெரியாது. யானை மீதமர்ந்து முரசறைந்து செய்தி தருவோரையும் வள்ளுவர் என்பர். முதலாங்குறளில் வரும் ஆதியும், பகவனுந்தான் வள்ளுவரின் தாயும், தந்தையுமா? நாலு பெண்களும், மூன்று ஆண்களுமாக மொத்தம் எழுவரா பிறந்தோர்? பிறந்தோரைப் பெற்றோர் அவ்விடத்திலேயே விட்டுச் சென்றனரா? பிறந்த இடம் மயிலாப்பூர்தானா? துணைவி அடிவருடிப் பின் தூங்கி முன்னெழுந்த பேதை வாசுகிதானா? பிள்ளைகள் யாரும் இல்லைத்தானா? கிணற்றில் நீர் அள்ளும்போது அள்ளிய குடம் அப்படியே நின்றது தானா? இறந்த வளளுவரின் உடலை உண்ட காகங்கள் பொன்னிறமாயினதானா? பகல் முழுவதும் பனையின் நிழல் அவரின் மீதுதான் விழுந்ததா? என்பவையெல்லாம் ஆய்வுக்குரியவை. நமக்கு இவையெல்லாம் முக்கியமல்ல. கண்முன்னால் காணும் குறளிலுள்ள 1330 பாக்களும் தரும் கருத்துக்களே முக்கியம். இந்த முப்பாலை முத்தலைப்புக்களில் கூடிய வரை ஆய்வதே என்நோக்கு. இதனால் தெரிபடக் கூடிய தாகலாம் நான் காணும் வள்ளுவரின் போக்கு?

**1. வள்ளுவர்காலத் தமிழர் நிலை:**

குறளைப் பயிலுமுன் வள்ளுவர் காலத் தமிழர் நிலையை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இல்லையேல் வள்ளுவரைப் பிழையாகக் கருதவேண்டியும் வரலாம்? ஒரு காலம் இமயந்தொட்டுக்குமரி வரை விளங்கியது தமிழர் பண்பாடே - திராவிடர் நாகரிகமே. 'அரப்பா' வின் ஆய்வுகளே சான்று. தென்னாசிய ஆசியர் 'ஆ' க்களுடன் 'கைபர்' மூலம் வட இந்தியாவில் நுழைந்து மலைச்சாரல்களில் (உயர்ந்த மேட்டுப் பகுதிகளில்) வாழ்ந்ததும் வரலாறே. அவர்களைத் தமிழர் விருந்து (புதியவர்) என வரவேற்றனர். வானோர் 18 - விசும்புளார் 25 - அமரர் 121 - என்றெல்லாம் அழைக்கலாயினர், இருப்பிடத்தை வானகம் 101 - வானம் 353 - புத்தேளுலகம் 213 - மேலுலகம் - 222 (வான் = உயரம்) என்றெல்லாம் கூறினர். நாளடைவில் ஆரியர் தமிழருடன் கலக்கலாயினர். இருவேறு பண்பாடுகள் இணையலாயின. தம் கோட்பாடுகளைத் தமிழர் படிப்படியாகக்கைவிடலாயினர். ஆரியக்கோட்பாடுகளைக் (எழு பிறப்பு-மோட்ச நரகம் - இல்லற மற்றதுறவறம் - போலித்தவம் - கொலை வேள்வி) கைக்கொள்ளலாயினர். அவர்களின் புளுகு நூல்களைக்கற்று நம்பலாயினர். இந்த நிலையிலேதான் வள்ளுவன் என்றொருவன் வந்தான். கசடறக் (வரலாறுகளை) கற்றான். மெய்ப் பொருள் கண்டான். இருவேறுகைத்தியற்கையை அறிந்து தெளிவுபெற்றான். 374.

---

## சோ. இராசேந்திரம்

---

**2. நூல் ஆக்கியதன் நோக்கம்:**

தமிழ் மக்கள் தம் நயத்தக்க நாகரிகப் பண்பாடுகளை விடுத்து மாற்றார் கோட்பாடுகளைப் பின் பற்றுவதை வள்ளுவர் கண்டார். மனம் மிக நொந்தார். 'பண்புடையார்ப்பட்டுண்டு உலகம், அஃதின்றேல் மண்புக்கு மாய்வது மன்' 996. ஆதலால் தமிழ் மக்களின் பண்பாட்டுச்சரிவுகளை நிமிர்த்த எண்ணினார். புரட்சிப்போக்கில் 967 - புதுமை நோக்கில் - துணிவாய் 611 - சில கருத்துக்களை முன்வைத்து - சிலவற்றில் மக்கள் கருத்தோடு ஒட்டிப்போய் ஒரு வாழ்க்கைச்சட்ட (தவிர்வன-கொள்வன) நூல் எழுத முனைந்தார்: இதனாற்றான் சங்கப்புலவர்கள் கூட இந்நூலை எதிர்த்தனர் என்பதையும் மனங் கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் மறுமையிலல்ல, இம்மையில் வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் வேண்டும் என்னும் நன்னோக்கில் நூல் எழுதினாரே தவிர, மறுமையில் மோட்சத்திற்கு வழிகாட்டும் நோக்கில் அவர் நூலை எழுதவில்லை. 595-596. இவற்றை உணராமல் குறளைப் பயில்வதால் மெய்ப்பொருளைக்காணல் இயலாது. தெளிந்த கருத்துக்களைக்கைக்கொண்டு வாழ்தல் இய

லாது. எல்லா நூல்களையும் போல் நுனிப்புல் மேய்ந்து விட்டு தூக்கி வீச வேண்டியதாய்த் தானிருக்கும். இழப்பு நமக்கேயொழியக் குறளுக்கில்லை.

3. வள்ளுவரின் புரட்சிப்போக்கு:

அந்நாளில் நூல் செய்வோர் (இறை நலம்) கடவுள் வாழ்த்துப் பாடியே (காப்பு) தொடங்க வேண்டும். இன்றேல் முற்றாய்ப் புறக்கணிப்பர். எனவே 133 இல் ஒன்றை ஒதுக்கினார். பொதுவாக பகவன், அறிவன், மலரான், இலான், இறைவன், அவித்தான், அந்தணன், குணத்தான் என்ற சொற்களையே பயன் படுத்தினார். எல்லாம் உருவகங்களே. இல்லாவிடில் இது பொது மறையாயிருக்குமா? அவர் மதத்திற்குள் போகவுமில்லை - கோயிலுக்குள் கிடக்கவுமில்லை. இறையை இறைவனாய்த் திரு. வி. க. உருவகித்துள்ளமையும் (சன்மார்க்கத்திறவு) நோக்கத்தக்கது. இதுவே வள்ளுவரின் புரட்சிப்போக்கின் தொடக்கம். வாழ்வில் மக்கள் காணவேண்டியது இன்பம் - பேரின்பம். அது இல்லறத்தில் தான் உண்டு என்றார். (கண்டு கேட்டு 1101 - தாம் வீழ்வார் 1103 - புலத்தலின் 1323) ஐந்து தான் வாழ்வென்றறிந்து, (இல்வாழ்வு) ஆறைப்பெற்று, (வாழ்க்கைத்துணை) ஏழைக்கண்டு, (மக்கட் பேறு) எட்டோடும் - ஒன்பதோடும் - பத்தோடும்- பதினொன்றோடும் - பன்னிரண்டோடும் - பதின் மூன்றோடும் - பதினான்கோடும் - பதினாறோடும் - இருபத்திரண்டறிந்து - இருபத்துமூன்றுடனும் - இருபத்துநான்குடனும் - இருபத்தைந்துடனும் வாழ்ந்து வயதாகிய பின் குடும்பத்தை மக்களிடம் ஒப்படைத்துத் துறவியாகித் தொண்டாற்றி மறைக! என்கிறார். இதுவே வாழ் வாங்கு வாழுதல் என்பது வள்ளுவர் கருத்து. பதினைந்து - பதினேழு - பதினெட்டு - பத்தொன்பது - இருபது - இருபத்தொன்று - இருபத்தாறு- இருபத்தெட்டு - இருபத்தொன்பது - முப்பத்தொன்று - முப்பத்திரண்டு - முப்பத்துமூன்று - முப்பத்தேழு போன்றவற்றை வாழ்வில் தவிர்க்கச் சொல்கிறார். (குறள் பார்த்தறிக) முப்பத்து மூன்றைத் தவிர்க்கவே இருபத்தாறைக் கடைப்பிடிக்கச் சொல்கிறார். இயலாவிடில் நாற்பத்து மூன்றில் 423 ஐப்பயன்படுத்த வேண்டியதே.

இன்பத்தை மக்கள் முழுமையாகக்காண வேண்டுமானால் பொருள் முக்கியம். அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை என்கிறார்கள். அதையும்தொட்டு வள்ளுவர் சொன்னார். பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லாதது போல்தான் அது என்று. 247 எனவே செறுநர் செருக்கறுக்கும் கூரிய எஃகான பொருளைச் செய்க 759 என்றார். பொருள் மாயை அல்ல - பொருளை வைத்துக்கொண்டு செயல் செய்தல் குன்றின் மேலேறி யானைப்போர் பார்த்ததுபோல் 758 என்றார். பொருள் என்ற பொய்யா விளக்கு நினைத்த இடஞ் சென்று இருள் கெடுக்கும் 753 என்றார். எனவே நமக்கு 76 முக்கியம் அதுவும் அன்போடும் அருளோடும் தீதின்றி வரும் பொருளாய் இருக்கவேண்டும். அப்பொருள் தான் அறஞ் சார் இன்பந்தரும் 754. என்றார். செல்வரை எல்லோருஞ் சிறப்புச் செய்வர். - இல்லாரை எல்லாரும் எள்ளுவர் 752 என்ற வள்ளுவர் கருத்தை 2025 ஆண்டுகளின் பின்னும் இன்றும் அப்படியே காண்கிறோமல்லவா? கல்வி கல்லாதவன் - கேள்வியறிவில்லாதவன் அரசாளக் கூடாது என்பது அவர் கருத்து. அரசன் பெரியாரின் துணையோடு சிற்றினம் சோரது வலி - காலம் - இடம் அறிந்து தெளிந்து விளையாட வேண்டும். மறதி, சோம்பல் கூடாது. இடும்பை இயல்பு என்று, முயற்சியால் ஊழையும் உப்பக்கம் கண்டு, சொல்வன்மை, வினைத்தூய்மை, திட்பம் உள்ள அமைச்சரோடும் - நல்ல தூதுவரோடும் கொடுங் கோலற்ற செங்கோல் புரியவேண்டும் என்கிறார். படை கொண்டு நாடு காத்து நட்புப்பூண்டு பேதைமை, உட்பகை நீக்கி - கள், சூது அகற்றி - மானம், பெருமை, பண்பு, சான்றாண்மை காத்து - உழவு பேணி - வறுமை நீக்கி வாழ வேண்டும் என்கிறார். கயவரை இனம் காட்டு கிறார். 828.

எல்லோரும் ஆசிரியப்பாவாலெழுதிவந்த நாளில் இவர் குறள் வெண்பாவாலெழுதியதும் ஒரு புரட்சிதான். ஒவ்வோரியலையும் பத்துப்பத் தாக்கியதுடன், வீட்டைத் தவிர்த்து முப்பாலாக் கியதும் ஒரு புரட்சிதான். துணிந்து சில ஆரியக் கோட்பாடுகளைக் கண்டித்துள்ளதைப் பார்த்தால் இவர் திராவிட நெறியைக் கொண்ட ஒருவர் போலவே தெரிகின்றது. தேவர் உலகின் தலைவனான இந்திரனை புலனாசை தவிர்க்காத ஒருவனாகவே அறிமுகம் செய்கிறார் 25 பாற் கடல் கடைந்து வந்தது அமிழ்தல்ல - இவ்வுலகை வாழவைக்க வல்ல மழைதான் அமிழ்தம் என் கிறார் 11. வானம் வரண்டால் தேவருக்கேது பூசை, தவம் என்கிறார். அறம் என்றால் உலகத் திற்காகத் தருமம் செய்வதல்ல சிவிகையல்ல 37 - மனத்தில் மாசின்றி இருத்தல் (அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல்) மட்டுமே என்கிறார். 34 - 35 தவ வாழ்வை விட இல் வாழ்வே தெய்வநிகர் வலிமையுடையது (மேலுல

கடையவைப்பது) 48 - 50 - கொழுநன் தொழுபவள் பருவகால மழைக்குச்சமம் 55 என்கிறார். அந்தணர் பிராமணரல்ல - அறவோர், அவர் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுவார் 30 என்கிறார். குறளில் தந்தை மகற்காற்றும் நன்றியுமுண்டு 67 - மகன் தந்தைக் காற்றும் உதவியுமுண்டு 70 - தாய்க்காற்றுவதுமுண்டு 69. இருந்து ஓம்பி இல் வாழ்வது விருந்து ஓம்பி வேளாண்மை செய்யத்தான் என்று வள்ளுவர் உரைத்த தமிழர் பண்பாட்டை சாவா மருந்து கடைந்து கண்ட வானத்தவர் முறையாகப் பயன்படுத்தியதாகவே தமிழரின் வரலாற்றால் அறியக் கிடக்கின்றது.

உயிர்க்கொலை நிகழ்வதால் ஆரியவேள்வியைக் கண்டிக்கிறார் வள்ளுவர் 259 260 துன்பம் பொறுத்தலும் - துன்பம் செய்யா திருத்தலுமே தவம் என்றுரைத்தவர் 261, போலித்துறவை மிக வன்மையாகக் கண்டிக்கிறார். மழித்தும் - நீட்டியும் 280, நீராடியும் 278, நெஞ்சம் துறவாமல் 276, புலித்தோல் போர்த்திய பசுப்போலும் 273, வேட்டுவன் புதல் மறைந்து பறவை பிடிப்பது போலுமான 274 கூடா ஒழுக்கத்தை வெறுக்கிறார். ஆகவே தோற்றம் வேண்டாம் 272, செயலைப்பார் 279 என்கிறார். உள்ளத்தால் உள்ளலும் களவே என்றுரைத்தவர் 282, புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின் பொய்யும் மெய் போலாம் 292 என்கிறார்; சினம் துறந்தாரே துறவி என்கிறார். 310 எனவே சாபமிடும் முனிவரை வள்ளுவர் விரும்பவில்லை. நாள் என்பது உயிர் ஈரும் வாள் 334 என எண்ணி நேற்றிருந்தார் இன்றில்லை என்ற பெருமை கொண்ட உலகில் 336 கோடி கோடியாய்க் கருதுவதே அல்லாமல் ஒருபொழுதும் வாழ அறியாத 337 மக்கள் எதிலிருந்து விடுபடுகிறார்களோ அதிலிருந்து துயர் 341 இல்லை என்கிறார். எப்பொருள் எப்படித்தோற்றினும் அதன் இயல்பை அறியும் மெய்யுணர்வில்லார் 355 தெளிவில்லார் என்கிறார். ஆரிய ஊழ் வினையை நம்பிய மக்களுக்கு உலகின் இருவேறு இயற்கையையும் செல்வி 374 அழிவைத்தடுக்கும் கருவி அறிவென்று கூறி 421 முயற்சியால் ஊழையும் உப்பக்கம் காணலாம் 620 என்றுரைத்து முயற்சியும், நிறை அறிவுமே வாழ்வின் உயர்வு 1022 என்று அடித்துக்கூறுகிறார். வறுமையைப்போல் துன்பமானது வறுமையே 1041 என்றுரைத்த வள்ளுவர், கேட்கு முன் கிடைக்குமாயின் இரப்பதும் இன்பமே என்றுரைத்தாலும் 1052 அது ஊணல்ல - கூழாயினும் முயற்சியால் கிடைத்ததே ஊண் என விளக்கி 1065 பசுவிற்கு நீர் என்று இரந்தாலும் அது நாவிற்கு இழிவு என்று கூறி 1066 அப்படி இரந்து தான் வாழ வேண்டுமென படைத்தவன் ஏற்படுத்தியிருந்தால் இரப்பானைப்போல் அவனும் அலைந்து கெடுவானாக 1062 என்று படைத்தவனுக்கே துணிந்து சாபமிட்டவர்தான் நம் புரட்சிக்கார வள்ளுவர். மக்கள் மீதுள்ள அளவற்ற பற்றுதல் தான் இதன் காரணம் எனலாம்.

தேவர்களைப்பற்றிய நல்லெண்ணம் வள்ளுவரிடமில்லை. மனம் போனபடி நடப்பதால் தேவரும், கயவரும், ஒருவரே 1073 என்று துணிந்து கூறியவரே வள்ளுவர். வள்ளுவரிடம் மூடக்கொள்கைகள் இல்லாதிருந்தும் அப்போதையத் தமிழர் கொண்டிருந்த சில மூடக்கோட்பாடுகளை சான்றுக்காக எடுத்தாண்டிருக்கிறார். காதலரை ஒரு நாள் கண்டேன், அதனால் உண்டான அலர் திங்களைப் பாம்பு கொண்டது போல் எங்கும் பரவி விட்டதே எனக் காதலி கூறுவதாக 1146 கூறியுள்ளார். நனவில் அன்பு செய்யாத வரைக் கனவில் காண்பதால் தான் என் உயிர் இன்னும் உள்ளது என்று காதலி காதலனைப்பற்றிக் கூறுவதாகக் கூறியுள்ளார் 1213, உலகத்தார் உண்டென்பதை இல்லை என்பவன் பேயாகக் கருதப்படுவான் 850 என்று பேய் பற்றியுரைக்கிறார் புல்லறிவாண்மையில். ஊண் உண்டால் நரகம் அவனை வெளிவிடாது 255 என்று நகரகத்தைப் பற்றிக் கூறியுள்ளார். மேலுலகம் இல்லையென்றாலும் கொடுப்பதே நல்லது 222 என்று மேலுலகத்தைப் பற்றியும் சொல்கிறார். மறைந்த ஒருவரைப்பற்றி இங்கு பேசப்படுவதே மறுமை என்ற பொருளிலேயே இன்சொல் இம்மையும், மறுமையும் இன்பம் தரும் 98 என்று கூறுகிறார். எமனே வரினும் எதிர்த்து நின்று தாக்கும் ஆற்றல் கொண்டதே படை என்று 765 எமனைப் பற்றிக் கூறுகின்றார். பொறாமை உடையவனைத்தமக்கைக்குக் காட்டி தங்கை விட்டு நீங்கி விடுவாள் 167 எனச் சீதேவி - மூதேவி பற்றிக் கூறுகிறார். துன்பந் துடைத்தவரின் நட்பைப் பல பிறவியிலும் (பரம்பரை) மறவாது போற்றுவர் பெரியோர் 107 என்று எழு பிறப்புப் பற்றிப் பல என்னும் கருத்தில் தெரிவிக்கிறார்.

இறுதியாக:

ஒரு சில குறள்களின் காலத்திற்கொவ்வாப் பொருள் காணப்படினும், (பெண்வழிச்சேறல் 91) இன்று வரை சாகாதிருக்கும் - தமிழில் வந்த உலகப் பொது மறையான பொய்யாமொழியில்

உலகப்பேரறிஞர்களின் அத்தனை கருத்துக்களும் அடங்கியிருப்பதுடன், அப்பேரறிஞர் மூக்கிலே விரலை வைத்து வியக்கத்தக்க பொருளாழம் மிக்க பல குறள்கள் (பிழைகாணவியலாத - சரி சரி என ஆமோதிக்க வேண்டிய) ஒளி வீசிக்கொண் டிருப்பதை உலகம் ஒப்பியே தீரவேண்டும். எனவே திருக்குறள் அக்கால மக்கள் இலக்கியம் மட்டுமல்ல, எக்கால மக்களுக்கும் வழிகாட்டும் இலக்கியமாய் விளங்குவதால் இது தனித்து வள்ளுவர் மட்டும் எழுதியதல்ல, பலர் எழுத இவர் தொகுத்துள்ளார் போலும்? அதனால் தான் முன்னுக்குப் பின் பல முரண்பாடுகள் (ஒவ்வொன்றைப் பற்றியும் மிக அழுத்தி - வலியுறுத்திக் கூறுவதால்) உள்ளன போலும்? எனவும் சிலர் சிந்திக்க முயல்வதும் இயல்புதான். ஒவ்வோர் குறளும் தரும் பொருளைக் கொண்டு ஒவ்வோர் கட்டுரையே எழுதிவிடலாம்? ஒரு திருக்குறள் நூலை ஒழுங்காய்ப் படித்து முடித்தவர் நூற்றுமுப்பத்துமூன்று ஆய்வு நூல்களைக் கற்று முடித்தவராவார். ஆதலின் கற்பவை (திருக்குறளை) கசடறக் கற்க (மெய்ப்பொருளாய்ந்து கற்று) கற்ற பின் அதற்குத்தக நிற்க 391 (அவ்வாறு வாழ்விற் கொண்டு ஒழுகுக) திருக்குறள் சொற்பொழிவுக்கு மட்டுமல்ல - வாழ்வுக்குமாம்.

I. அரியகற்றுஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு. 503.

II. நெடுநீர் மறவி ,மடி துயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். 605.

III சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். 664.

என்னும் மும்மணிக் குறளையும் கூறி முடிக்கிறேன்;

குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல் 504 நலம்;

சமன் செய்து சீர் தூக்கும் கோல்போல்
அமைந்தொருபால்
கோடாமை சான்றோக் கணி 118.

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ் மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

வானம் அளந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

மகாகவி பாரதியார்

பதிப்பாக்கம்:
வடக்கு - கிழக்கு மாகாண
பதிப்பகத் திணைக்களம்
அன்பு ஒழுங்கை,
உப்புவெளி.
திருக்கோணமலை.